Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
FRIDAY, OCTOBER 14, 2022

வெள்ளிக்கிழமை, 14 ஒக்டோபர் 2022 | ஒளி: 08 கதிர் 121 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## பத்து மாதங்களில் 60 ஆயிரம் டெங்கு



கடந்த பத்து மாதங்களில் நாடளாவிய ரீதியில் அண்ணளவாக 60,000 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். தற்போது நிலவும் மோசமான காலநிலை காரணமாக டெங்கு பரவல் மேலும் வேகமாக அதிகரிக்கும் அச்சுறுத்தல் இருப்பதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வாரத்தில் மாத்திரம் 1,152 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதுவரை நாடளாவிய ரீதியில் 59,317 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

தொடர்ச்சி P2

## உள்ளக பொறிமுறைக்குள் தீர்வுக்கு முயல்கிறோம்



**புலம்பெயர் அமைப்புகளுடன் அடுத்தமாதம் பேச்சுவார்த்தை**

பா.நிரோஸ்

பொறுப்புக்கூறல் விடயத்தில் உள்ளக பொறிமுறையின் ஊடாகவே பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயல்வதாகத் தெரிவிக்கும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, அடுத்த மாதம் நடைபெறும் புலம்பெயர் அமைப்புகளுடனான கலந்துரையாடல் வெற்றிபெற்றால், இலங்கை விடயத்தில் சர்வதேசத்தின் தலையீடுகள் இருக்காதெனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 2023ஆம் ஆண்டிற்கான இலங்கையின் வளர்ச்சிக் கணிப்புகளில் தரமிறக்கம் ஏற்படும்

### ஐ.எம்.எப் அறிவித்துள்ளது.



இலங்கை தற்போது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியின் விளைவாக, 2023ஆம் ஆண்டில் இலங்கையின் உண்மையான மொத்த தேசிய உற்பத்தி மறை 3 சதவீதமாக வீழ்ச்சியடையும் எனவும், 2027ஆம் ஆண்டளவில், அது 3.1 வீதமாக வளர்ச்சி அடையும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் புதிய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின், வாழ்க்கைச் செலவு நெருக்கடியை எதிர்கொள்வதில் கவனம் செலுத்தும் உலகப் பொருளாதாரக் கண்ணோட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## கோட்டாவின் தவறான தீர்மானங்கள் விசேட கணக்காய்வு ஆரம்பம்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட தவறான பொருளாதார முகாமைத்துவ தீர்மானங்கள் தொடர்பான உயர் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விசேட கணக்காய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி.விக்ரமரத்ன தெரிவித்தார்.

குறித்த பொருளாதார தீர்மானங்களினால் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறல் மனுக்களை பரிசீலனை செய்ய உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் அடிப்படையிலேயே கணக்காய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## நிதியை அல்ல நீதியை தா

### வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம்

றொசேரியன் லெம்பட்

ஆட்சிக்கு வருகின்ற அனைத்து அரசாங்கங்களும் பாதிக்கப்பட்ட மக்களை காப்பாற்றுவதற்காகவும் நீதியை பெற்றுத் தருவதற்காகவும் செயல்படவில்லை. அவர்கள் தமது அரசினையும்,தமது மக்களையும் இராணுவத்தையும் பாதுகாப்பதற்காகவும் பயங்கரவாதத்தை ஆதரித்து போர்க்குற்றத்தை மேற்கொண்டவர்களையே பாதுகாப்பு வழங்கி வருகின்றன என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## காணாமல் போனோர் விவகாரத்துக்கு 2023 இறுதிக்குள் தீர்வு

பா.நிரோஸ்

காணாமல் போனோருக்கான அலுவலகத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளில் மிக குறைந்த அளவிலான கோப்புகளையே விசாரித்துள்ளனர்,

தொடர்ச்சி P2



## ஓமந்தையில் மின்னல் தாக்கி ‖ மாடுகள் பலி

முழுச் செய்தி P4

## மழை விடாது



நாட்டை அண்மித்த பகுதிகளில் குறைந்த வளிமண்டல தாழமுக்கம் நீடிப்பதால், நாட்டில் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்து வருகின்றது. இந்நிலையில் இன்று வரையில் நாட்டில் 13 மாவட்டங்களில் கனமழை பெய்யுமென வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக, மேல், சப்ரகமுவ, மத்திய, தென், வடமேல் ஆகிய மாகாணங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த மாகாணங்களில் சில பகுதிகளில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகளவான மழை பெய்யலாம் எனவும், நாட்டின் ஏனைய பகுதிகளில் 75 மில்லி மீற்றர் வரையில் மழை பெய்யலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## மைத்திரிக்கும் தயாசிறிக்கும் நோட்டீஸ்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன மற்றும் அக்கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர ஆகியோரை ஒக்டோபர் 19ஆம் திகதியன்று நீதிமன்றத்தில் முன்னிலையாவதற்கான நோட்டீஸ் பிறப்பிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம், நேற்று (13) உத்தரவிட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பதவிகளில் இருந்து தன்னை நீக்கியமையை சவாலுக்கு உட்படுத்தி துறைமுகங்கள்,

தொடர்ச்சி P2

## வல்லரசுகளின் விவேகமற்ற தீர்மானங்கள் தேசிய நல்லிணக்க தேடலை சீர்குலைக்கும்

### ஐ.நாவில் இலங்கை தெரிவிப்பு



உலகளாவிய அதிகார வரம்பை உலக வல்லரசுகள் பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும் என ஐ.நா.வில் இலங்கை தெரிவித்துள்ளது. தண்டனையின்மைக்கு எதிரான போராட்டத்தில் உலகளாவிய அதிகார வரம்பை பொறுப்புடன் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் இலங்கை வலியுறுத்தியுள்ளது.

உலகளாவிய அதிகார வரம்பின் விவேகமற்ற அல்லது அகால பிரயோகம் வன்முறை மோதல்கள் அல்லது அரசியல் அடக்குமுறைகளில் இருந்து மீளப் போராடும் நாடுகளின் அமைதி மற்றும் தேசிய நல்லிணக்கத்திற்கான தேடலையும் சீர்குலைக்கக்கூடும் என ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிட பிரதிநிதி சுகீஸ்வர குணரத்ன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## போராட்டக்காரர்களை ஒடுக்க கொண்டுவரவில்லை

பா.நிரோஸ்

புனர்வாழ்வு பணியக சட்டமூலமானது போராட்டக்காரர்களை ஒடுக்குவதற்காக கொண்டுவரப்படவில்லை. அதுமட்டுமல்ல, நான் அமைச்சுப் பதவியை பெறுப்பேற்பதற்கு முன்னரே இச்சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். நீதி அமைச்சில் நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 2 ஆவது சுனாமிக்கு அஞ்சுகின்றார் ரணில்

அரசாங்கத்துக்கு எதிரான இரண்டாவது சுனாமி அலை வருமென்ற அச்சத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவிப்பதோடு, இதனாலேயே போராட்ட இளைஞர்களுக்கு பயங்கரவாத முத்திரைக்குத்த முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பிள்ளைகளுடன் வரும் பெற்றோர் சிக்குவர்




பா.நிரோஸ்

போராட்டங்களுக்கு பிள்ளைகளை அழைத்து வரும் பெற்றோர்களை கைது செய்வதற்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளதாக தெரிவிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, நாட்டை மூழ்கடிக்கவே தற்போது தேர்தலை நடத்த வேண்டுமென சிலர் கூறுவதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், வீதிக்கு இறங்கி தேர்தலைக் கோரப் போவதாக சிலர் கூறுகிறார்கள். இது தேர்தலை கோருவதற்கான நேரமில்லை. தேசிய இணக்கப்பாடொன்றுக்கு வருவதற்கான நேரமாகும் என்றார். தீர்க்க முடியாத பொருளாதார நெருக்கடிக்கு தீர்வை வழங்குவதற்கான நேரமாகும். இவ்வாறான நிலையில் தேர்தலைக் கோரி நாட்டை மூழ்கடிக்கவே சிலர் பார்க்கிறார்கள் என்றார்.

தொடர்ச்சி P2

## ஆம். எனக்கு பயம்



நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் உள்ள விடயங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்க தனக்கு பயமாக இருப்பதாக இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.

இன்றையத்தினம் நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டுமென உத்தரவுப் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், நீதிமன்றத்தில் ஏன் முன்னிலையாகவில்லை என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இதற்கு பதிலளித்த சனத் நிஷாந்த, நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் உள்ள எந்தவொரு விடயங்கள் கருத்துத் தெரிவிக்க முடியாது. இதற்காக மன்னிக்கவும் என பதிலளித்தார். பயமா? என ஊடகவியலாளர் எழுப்பிய மற்றொரு கேள்விக்கு, ஆம், உண்மையில் பயமாக இருக்கிறது என பதிலளித்தார்.

## குருந்தூர் விவகார வழக்கு ஒத்திவைப்பு



விஜயரத்தினம் சரவணன்

குருந்தூர்மலை தொடர்பாக வழக்கிலக்கம் AR/673/18 இல் தொடரப்பட்டுள்ள வழக்கில், 12.06.2022 இற்கு முன்னிருந்த நிலையை பேணுமாறும், அதற்குமேல் கட்டுமானப் பணிகள் எதனையும் மேற்கொள்ளக்கூடாதென முல்லைத்தீவு நீதிமன்றம் 19.06.2022 அன்று கட்டளை பிறப்பித்திருந்தது.

இந்நிலையில் குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் கடந்த 22.09.2022 அன்று முல்லைத்தீவு நீதிமன்றில் விசாரணைகள் இடம்பெற்றபோது, நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளையானது மீறப்பட்டதாகவும், அவ்வாறு மீறப்பட்டதாலேயே கடந்த 21.09.2022 அன்று தமிழ்மக்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டதாகவும்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# உள்ளக பொறிமுறைக்குள் தீர்வுக்கு முயல்கிறோம்



நீதி அமைச்சில் நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். சர்வதேச பொறிமுறையின் ஊடாக சர்வதேச நிறுவனங்களின் கண்காணிப்பின் கீழ் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்க வேண்டும் என்பதே ஐ.நாவின் நோக்கமாக இருக்கிறது. எனினும் இப்பிரச்சினைகளை தீர்க்க இலங்கையே சில நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

தேசிய பொறிமுறையின் ஊடாக பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்க அரசாங்கம் எதிர்பார்க்கிறது. தேசிய பொறிமுறையின் ஊடாக சில பெறுபேறுகள் கிடைக்கும் பட்சத்தில் சர்வதேசத்தின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் எனவும் தெரிவித்தார். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசாங்கம் அதிக அக்கறையோடு செயற்பட்டு வருகிறது. இது தொடர்பில் நியமிக்கப்பட்ட விசேட குழு பல பரிந்துரைகளையும் வழங்கியிருக்கிறது. இப்பரிந்துரைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் நானும் ஜனாதிபதியும் பல்வேறு கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகிறோம். அடுத்த மாதமும் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறும். இது வெற்றியடைந்தால், இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாடுகள் தலையீடுகளை இல்லாது , இலங்கைக்கு ஆதரவளிக்கும் எனவும் தெரிவித்தார்.

## பத்து மாதங்களில் 60 ஆயிரம் டெங்கு

தற்போது நிலவும் டெங்கு பரவலைக் கருத்தில் கொண்டு 36 சுகாதார, வைத்திய பிரிவுகளை அதி அபாய வலயங்களாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் குறித்த காலப்பகுதியில் 19,912 டெங்கு நோயாளர்கள் பதிவாகி இருந்தனர். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு டெங்கு பரவலானது மூன்று மடங்கு அதிகரிப்பை வெளிப்படுத்தியுள்ளதாக டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள அதேவேளை கண்டி, காலி, யாழ்ப்பாணம், கேகாலை, புத்தளம், குருநாகல் ஆகிய மாவட்டங்களிலும் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

## வளர்ச்சிக் கணிப்புகளில் தரமிறக்கம் ஏற்படும்

இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தி இந்த ஆண்டு 9.2 சதவீதம் என்றும், 2023ல் அது மேலும் 4.2 சதவீதமாகவும் குறையும் என உலக வங்கி, தனது கண்ணோட்டத்தில் ஏற்கனவே கணித்திருந்தது. இந்நிலையில் உள்நாட்டு உற்பத்தி (GDP) சுருங்கும் இதன்படி, முந்தைய எதிர்பார்ப்புக்கு மாறாக மொத்த உள்நாட்டு உற்பத்தி சுருங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது. உலகளாவிய நிதி நெருக்கடி மற்றும் கோவிட் தொற்றுநோயின் கடுமையான கட்டத்தைத் தவிர, 2001ஆம் ஆண்டிலிருந்து பலவீனமான நிலை தொடர்வதாகவும் சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

## விசேட கணக்காய்வு ஆரம்பம்

இலங்கை ரூபாய்க்கு நிகரான டொலரின் பெறுமதியை 203 ரூபாவாக பேணிவது தொடர்பான இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை மேற்கொண்ட தீர்மானம், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து உதவி பெறுவதில் தாமதம் ஆகியவை குறித்து கணக்காய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும், இந்த வருடம் ஜனவரி 18ஆம் திகதி 500 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இறையாண்மை பத்திரங்களை வெளிநாட்டு கையிருப்பை பயன்படுத்தி மீளச் செலுத்தியமை மற்றும் அந்த கொடுப்பனவுகளால் மத்திய வங்கிக்கு ஏற்பட்ட இழப்பு ஆகியன குறித்து கணக்காய்வுக்கு செய்யப்படவுள்ளது. குறித்த கணக்காய்வு தொடர்பான தகவல்கள் இலங்கை மத்திய வங்கி மற்றும் திறைசேரியில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் என்றும் அதற்காக பிரதி கணக்காய்வாளர் நாயகம் ஒருவரின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் கணக்காய்வாளர் நாயகம் குறிப்பிட்டார்.

## 2 ஆவது சுனாமிக்கு அஞ்சுகின்றார் ரணில்

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார், போராட்டக்காரர்களுக்கு பயங்கரவாத முத்திரையை குத்தவே அரசாங்கம் தொடர்ந்து முயல்கிறது. வசந்த முதலிகே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். போராட்டக்காரர்களை புனர்வாழ்வுக்குட்படுத்தவும் சட்டமூலங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கு எதிரான இரண்டாவது சுனாமி அலை வருமென மிகுந்த பயத்தில் இருக்கிறார். மக்களின் போராட்டம் பயங்கரவாதம் என்றால், மக்களின் போராட்டம் ஊடாகவே ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். எனவே இதுவும் பயங்கரவாதம் எனவும் , போராட்டக்காரர்களுக்கு பயங்வரத முத்திரையைக் குத்துவதற்கும் நாம் இடமளிக்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.



## நிதியை அல்ல நீதியை தா

மன்னாரில் நேற்று (13) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு 2 இலட்சம் ரூபாய் பணமும் மரண சான்றிதழ் வழங்க உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ஏற்கெனவே ஒரு லட்சம் ரூபாய் வழங்க உள்ளதாக தெரிவித்தனர். தற்போது அதற்கு வட்டியுடன் சேர்த்து 2 இலட்சம் தருவதாக கூறுகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக அம்மாக்கள் வீதிகளில் நின்று போராடி வருகின்றனர்.கையில் ஒப்படைக்கப்பட்ட,கண் முன்னே பிடித்துச் செல்லப்பட்ட நிலையில் காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளை தேடி நாங்கள் வீதியில் நின்று போராடி வருகிறோம்.சுமார் 2 ஆயிரம் நாட்களையும் தாண்டியுள்ளது எமது போராட்டம். எமக்கு நீதி வேண்டும்.எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது?என்றே நாங்கள் கேட்டுக் கொண்டே இருக்கிறோம். நாங்கள் அரசிடம் நிதி கேட்கவில்லை. இவர்கள் வழங்கவுள்ள 2 இலட்சத்தையும் நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

நாங்கள் தொலைத்தது ஆடு,மாடுகளை இல்லை. எமது பிள்ளைகளையே நாங்கள் கையில் ஒப்படைத்த,வீடுகளில் வந்து பிடித்துச் சென்ற எமது பிள்ளைகளையே கேட்கிறோம். எமது பிள்ளைகள் எங்கே? என்ன நடந்தது என்றே கேட்கின்றோம். எங்களையும் ஏமாற்றி உலக நாடுகளையும் ஏமாற்றி ஜெனிவா கூட்டத்தொடர் இடம் பெறுகின்ற போது ஒவ்வொரு வருடமும் புதிது புதிதாக விடையங்களை சமர்ப்பிக்கின்றனர். எமது பிள்ளைகளை கொலை செய்து விட்டு 2 இலட்சம் ரூபாய் பணத்தையும் மரண சான்று தலையும் வழங்க இந்த அரசு எத்தனிக்கிறது. நீங்கள் எங்களுக்கு 2 இலட்சம் தர வேண்டாம். நாங்கள் உங்களுக்கு 4 லட்சம் தருகிறோம். எங்களது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று கூறுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

### 2023 இறுதிக்குள் தீர்வு

இவ்வாறான தாமதங்களே சர்வதேச அரங்கில் நாம் நெருக்கப்பட பிரதான காரணம் என தெரிவித்துள்ள நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, அடுத்த வருடத்தின் இறுதியில் அனைத்து கோப்புகளையும் விசாரித்து முடிப்பதற்கே எதிர்பார்த்துள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார் .

நீதி அமைச்சில் நேற்று (13) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்திருந்தார். அவர் மேலும் கூட்டுகையில்,

நல்லிணக்கச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான 3 அலுவலகங்கள் நிதி அமைச்சரின் கீழ் இயங்குகின்றன. குறிப்பாக காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் ஊடாக 7 ஆயிரம் கோப்புகள் விசாரிக்கப்பட வேண்டியிருக்கிறது. கடந்த காலத்தில் வெறும் 65 கோப்புகள் மாத்திரமே விசாரிக்கப்பட்டுள்ளன. இலங்கை மீது ஐ.நா குற்றச்சாட்டுக்களை முன்வைக்க இத்தகைய தாமதங்களே பிரதான காரணம் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

எனினும், கடந்த 3 மாதங்களில் மாத்திரம் 1200 கோப்புகளை நாம் விசாரித்திருக்கிறோம். அடுத்த வருடத்தின் இறுதியில் அனைத்து கோப்புகளையும் விசாரித்து முடிப்பதற்கே எதிர்பார்த்துள்ளோம் எனவும் கூறினார்.

## மைத்திரிக்கும் தயாசிறிக்கும் நோட்டீஸ்

கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தாக்கல் செய்த மனு தொடர்பில் விளக்கமளிப்பதற்கே இருவருக்கும் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த மனுவில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, லசந்த அழகியவன்ன மற்றும் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயரிப்பட்டுள்ளனர்.

தற்போதைய பிரதமர் பதவியேற்றதன் பின்னர் அமைச்சரவைப் பதவிகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் 2022 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினத்தில் இடம்பெற்ற மத்திய செயற்குழு கூட்டத்தில் கலந்துரையாடியதாக மனுதாரர் தெரிவித்துள்ளார்.

கட்சியில் தாம் வகித்து வந்த பதவிகளில் இருந்தும் நீக்கப்பட்டதாக தமக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் கட்சியின் யாப்பின் கீழ், தம்மை எந்த பதவியில் இருந்தும் நீக்குவதற்கு மத்திய செயற்குழுவுக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## போராட்டக்காரர்களை ஒடுக்க கொண்டுவரவில்லை

அவர் மேலும் கூறுகையில், புனர்வாழ்வு பணியக சட்டமூலமானது போராட்டக்காரர்களை அடக்குவதற்காக கொண்டுவரப்பட்ட சட்டமென பலரும் கூறுகிறார்கள். ஆனால், நான் அமைச்சுப் பதவியை பெறுப்பேற்பதற்கு முன்பாகவே இச்சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றார்.

போதைப்பொருளுக்கு அடிமையானர்களை நீதிமன்ற உத்தரவைப் பெற்றே புனர்வாழ்வு மய்யங்களில் அனுமதிக்க முடியும். எனினும், பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை நீதிமன்றம் ஊடாக புனர்வாழ்வளிப்பதை அவமானமாக நினைக்கிறார்கள். அதனால் சுயாதீனமாக தங்களது பிள்ளைகளே அவர்களே புனர்வாழ்வளித்தல் செயற்பாடுகளில் ஈடுபட வைப்பதே இச்சட்டமூலத்தின் பிரதான நோக்கம் எனவும் தெரிவித்தார்.

போராட்டக்காரர்களை அடக்குவதற்காக இச்சட்டமூலம் கொண்டுவரப்படவில்லை. நாட்டில் போராட்டங்கள் இடம்பெறுவதற்கு 10 வருடங்களுக்கு முன்பிருந்தே இச்சட்டமூலத்தைக் கொண்டுவருவதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்தார்.

## தேசிய நல்லிணக்க தேடலை சீர்குலைக்கும்

ஐ.நா பொதுச் சபையின் 12 ஆவது கூட்டத்தின் ஆறாவது குழுவில் உரையாற்றிய ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிட பிரதிநிதி சுகீஸ்வர குணரத்ன, சர்வதேச நீதியின் நிலப்பரப்பில் சமச்சீரற்ற தன்மையைக் குறைப்பதற்கு உலகளாவிய அதிகார வரம்பு ஒரு முக்கியமான வழிமுறையாகும். பலவீனமான அரசாங்கங்களை விட சக்திவாய்ந்த அரசுகளால் பாதுகாக்கப்பட்டவர்கள் குறைவாகவே பாதிக்கப்படுகின்றனர். துரதிர்ஷ்டவசமான உண்மை என்னவென்றால், சர்வதேச விவகாரங்களில் முடிவுகளை எடுப்பதில் அதிக சக்தி வாய்ந்த நாடுகள் நன்மையைப் பெறுகின்றன என அவர் கூறினார். உலகளாவிய அதிகார வரம்பை விவேகமான அல்லது சரியான நேரத்தில் செயல்படுத்துவது வன்முறை மோதல்கள் அல்லது அரசியல் அடக்குமுறைகளில் இருந்து மீளப் போராடும் நாடுகளில் அமைதி மற்றும் தேசிய நல்லிணக்கத்திற்கான தேடலை சீர்குலைக்கலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

> **பலவீனமான அரசாங்கங்களை விட சக்திவாய்ந்த அரசுகளால் பாதுகாக்கப்பட்டவர்கள் குறைவாகவே பாதிக்கப்படுகின்றனர்**

## பிள்ளைகளுடன் வரும் பெற்றோர் சிக்குவர்

பிள்ளைகள் தொடர்பில் பெற்றோர்களுக்கு அக்கறை இல்லை. எத்தனைப் பிள்ளைகளின் கை, கால்கள் உடைகின்றன. பிள்ளைகளை மோட்டார் சைக்களில் ஏற்றிச்சென்று விபத்து ஏற்படும்போது பிள்ளைகளின் கை, கால்கள் உடைகின்றன. சிலர் உயிரிழக்கிறார்கள். சில நாடுகளில் மோட்டார் சைக்களில் பிள்ளைகளை ஏற்றிச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் போராட்டங்களுக்கு பிள்ளைகளை அழைத்து வரும் பெற்றோர்களை கைது செய்வதற்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். போராட்டங்களுக்கு பிள்ளைகளை அழைத்து வரமுடியாது எனவும் தெரிவித்தார்.

## குருந்தூர் விவகார வழக்கு ஒத்திவைப்பு

குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சார்பான சட்டத்தரணிகள் புகைப்பட ஆதாரங்களையும் நீதி மன்றிலே சமர்ப்பித்தனர்.

அதனடிப்படையில் அவ்வாறு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகள் மீறப்பட்டதா என்பது தொடர்பில் பொலிஸார் மற்றும் தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோர் ஒக்டோபர் 13ஆம் திகதி மன்றில் தோன்றி விளக்கமளிக்கவேண்டுமென முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அந்தவகையில் நீதிமன்றின் உத்தரவை ஏற்று தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் அனுர மானதுங்க நீதிமன்றில் முன்னிலையானதுடன், தொல்லியல் திணைக்களம் சார்பில் சட்டமா அதிபர் திணைகள பிரதி சொலிசிட ஜெனரல் உள்ளிட்ட சட்டத்தரணிகளும் நேற்று (13) முன்னிலையாகியிருந்தனர்.

அத்தோடு பொலிஸார் மற்றும் குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சார்பான சட்டத்தரணிகளும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இந் நிலையில் குறித்த வழக்கு விசாரணைகள் நீதவான் ரி.சரவணராஜா முன்னிலையில் இடம்பெற்றதுடன், இரு தரப்பினரும் தமது சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

அந்தவகையில் இருதரப்பு சமர்ப்பங்களையும் செவிமடுத்ந

நீதிவான், இதுதொடர்பில் கட்டளையொன்றினை வழங்குவதற்காக எதிர்வரும் 27.10.2022ஆம் திகதிக்கு குறித்த வழக்கினைத் திகதியிட்டுள்ளார்.

மேலும் குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சார்பாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனும் நீதிமன்றிற்கு வருகைதந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மக்கள்சார் புதிய அரசாங்கத்தை அமைக்க

# தேர்தலை நடத்த வேண்டும்



மக்கள்சார் புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்க தேர்தலை நடத்த வேண்டுமென தெரிவிக்கும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, ராஜபக்ஷ புதல்வரின் பேச்சைக் கேட்டே போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களை புனர்வாழ்வளிக்க புனர்வாழ்வு பணியகத்தை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கம்பளையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றபோது, தள்ளாடும் பாலத்தைக் கடக்க வேண்டியுள்ளதாகக் கூறியிருந்தார். ஆனால், தற்போதுவரையில் ராஜபக்ஷர்களும் அவர்களின் புதல்வர்களும் பாலத்தைக் கடந்துள்ளனர். இவ்வாறு பாலத்தைக் கடந்த ராஜபக்ஷவின் புதல்வர் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களை அடக்க வேண்டுமென கூறுவதாகவும் தெரிவித்தார்.

220 இலட்ச மக்களை அநாதரவான நிலையில் தள்ளிவிட்டு, ராஜபக்ஷர்களின் புதல்வரின் ஆலோசனையை கேட்டு போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களுக்கு புனர்வாழ்வளிக்க புனர்வாழ்வுப் பணியகத்தை ஸ்தாபிக்க தயாராகி வருவதாகவும். இதற்கு இடமளிக்க முடியாதெனவும் தெரிவித்தார்.

ராஜபக்ஷ புதல்வரின் பேச்சைக் கேட்காமல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளம் தலைமுறையினரை அடக்குமுறைக்கு உட்படுத்துவதற்குப் பதிலாக, அரச வன்முறையை அமல்படுத்துவதற்குப் பதிலாக,தொழில்நுட்பப் புரட்சி, ஆங்கில மொழி அறிவு, புதிய தொழில்நுட்பம் பற்றிய உயர் புரிதல் மூலம் நாட்டின் இளைய தலைமுறையினர் அறிவு மற்றும் தொழில்நுட்ப ரீதியாக வலுவூட்டப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

வதந்திகளை நிராகரித்து

# தீர்வுக்கான நடவடிக்கை எடுங்கள்



இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சோள விதைகளை விவசாயிகளுக்கு வழங்குவதில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை உடனடியாக தீர்க்குமாறு அதிகாரிகளுக்கு பிரதமர் தினேஷ் குணவர்தன ஆலோசனை வழங்கினார்.

ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான தேசிய வழிநடத்தல் குழுவின் கூட்டம் பிரதமர் தலைமையில் நேற்று (13) அலரி மாளிகையில் நடைபெற்றபோதே பிரதமர் இந்த ஆலோசனையை வழங்கினார்.

17 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான சவால்கள் குறித்து இதன்போது அதிக கவனம் செலுத்தப்பட்டது. தற்போதைய பொருளாதார நெருக்கடியால் சுகாதாரத் துறை மற்றும் விவசாயத் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு மேலதிகமாக, வறுமைப் பிரச்சினையை மீளாய்வு செய்தல், குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் அதிக கவனம்செலுத்துதல், உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உணவு உற்பத்தியை மேம்படுத்துதல், காலநிலை மாற்றத்தின் சவால்களை முறியடித்தல், நீர் முகாமைத்துவம் உள்ளிட்ட முக்கியமான துறைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

நாட்டின் பொருளாதாரச் சிக்கல்களால் தீவிரமடைந்து வரும் போசாக்கு குறைபாடு குறித்தும் பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன், திரிபோஷா உற்பத்தி குறைவதற்குக் காரணமாக அமைந்துள்ள சோள உற்பத்தி குறைவடைந்தமைக்கு, துறைமுக தாவர தனிமைப்படுத்தல் பிரிவின் ஊடாக, இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட சோள விதைகளை விடுவிப்பதில் ஏற்பட்ட தாமதமே இதற்குக் காரணம் என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர இதன்போது சுட்டிக் காட்டினார்.

இதன்போது கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, சோள விதைகளில் அஃப்லடொக்சின் கலந்துள்ளதாக வதந்திகள் பரவி வருவதால் உரிய அதிகாரிகள் பாதுகாப்பான செயற்பாடுகளை முன்னெடுப்பதன் காரணமாக விதைகளை விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக கூறினார். இது தொடர்பில் உடனடியாக தலையிட்டு விசாரித்தறியுமாறு அதிகாரிகளுக்கு பிரதமர் உத்தரவிட்டார்.

ஜனாதிபதியாக இருந்த ஒருவர்

# மீண்டும் எம்.பியாவதை தடைசெய்ய வேண்டும்

எம்.செல்வராஜா

ஜனாதிபதியாக இருந்த ஒருவர், மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராக வருவதை தடைசெய்யும் வகையில் சட்டம் திருத்தப்படல் வேண்டும். 22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தில், மேற்படி விடயத்தை எனது ஆலோசனையாக முன்வைத்துள்ளேனென்று இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க குறிப்பிட்டார்.

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க, ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர் அவரது பணியினை பதுளையில் மேற்கொள்ள செயலகமொன்று வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. அந்நிகழ்வில், உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இரட்டைப் பிரஜையாக இருப்பவர்களுக்கு எடுக்கப்பட்ட தீர்மானம் போன்றே, ஜனாதிபதியாக இருந்த ஒருவர், மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராக வருவதையும் தடை செய்ய வேண்டும். ஜனாதிபதி பதவியென்பது நாட்டின் அதிஉயர் பதவியாகும். அப்பதவியின் கால எல்லை முடிந்ததும், அவர் கௌரவமாக ஒதுங்கியிருக்க வேண்டியதாகும். அதை விடுத்து, மீளவும் பாராளுமன்ற உறுப்பினராக வருவதென்பது ஜீரணிக்க முடியாததொன்றாகும். அது ஜனாதிபதி பதவிக்கும் களங்கம் ஏற்படுத்தும் செயலாகும். ஜனாதிபதி என்ற உயரிய பதவிக்கு உரிய கௌரவம் தனித்துவமானது. அதனைப் பாதுகாத்துக் கொள்ளல் வேண்டும்.

மக்களுக்கு சேவையாற்றவே நாம் பாராளுமன்றம் சென்றிருக்கின்றோம். ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். எக்கட்சிக்கும் மக்கள் முன் செல்லவோ தேர்தலில் நிற்கவோ தேர்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளவோ உரிமையுண்டு. அவ்வுரிமையை எவராலும் தடுத்து விடமுடியாது. அரசியலில் எதுவும் நடக்கலாம். போனஸ் ஆசனத்தில் வந்த ஒருவர், இன்று நாட்டின் உயர்பதவியில் உள்ளார். நாளை என்ன நடக்குமென்று எவருக்கும் தெரியாது.

22வது திருத்தச் சட்டத்தை நான் ஆதரிப்பேன். ஆனால் ஜனாதிபதியாக இருந்தவர் பாராளுமன்ற உறுப்பினராக இருக்க முடியாது என்ற எனது கோரிக்கையையும் உள்ளடக்க வேண்டும் என்றார்.

# வழக்கிலிருந்து ஆலய நிர்வாகம் விடுதலை

க. அகரன்

வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் இருந்து ஆலயத்தின் நிர்வாகத்தினர் தற்காலிகமாக விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகளை ஆயர்படுத்துமாறு வவுனியா நீதவான், பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாரி மலையில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு தொல்பொருள் திணைக்களமும் நெடுங்கேணி பொலிஸாரும் பல்வேறு தடைகளை ஏற்படுத்தி வந்ததுடன் தொல்பொருட்கள் சார்ந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வவுனியா நீதவான் நீதிமன்றில் வழக்கினையும் தாக்கல் செய்திருந்தனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் வவுனியா நீதிமன்றில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த நிலையில் நேற்றும் (13) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட ஆலயத்தின் பூசகர் தம்பிராசா மதிமுகராசா, நிர்வாகத்தினரான தமிழ்செல்வன், சசி ஆகியோர் வழக்கிலிருந்து தற்காலிகமாக விடுதலை செய்யப்பட்டதுடன், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகள் யார் என்பதை ஆதாரங்களுடன் கண்டறிந்து, நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# நிலைப்பாட்டை அறிய தேர்தலை நடத்துங்கள்

தேர்தல் ஒன்றை நடத்தி மக்களின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

குறைந்த வருமானத்தை பெறும் நாடாக இலங்கையை மாற்றிய அனைவரும் தங்களது பதவிகளில் இருந்து விலகிச் செல்ல வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், தற்போதைய அரசாங்கத்துக்கு மக்கள் வழங்கிய ஆணை இல்லாதொழிந்துள்ளது. எனவே மக்கள் ஆணையை மீள கோர வேண்டும். தேர்தலைக் காலந்தாழ்த்தினால் என்ன நடக்கும் என மக்கள் பாடமெடுத்திருக்கிறார்கள்.

உரிய தினத்தில் தேர்தலை நடத்தாவிட்டால் அதற்கு எதிராக பாராளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியிலும் போராட்டங்களை மேற்கொள்ளவும், சர்வதேசத்துக்கு செல்லவும் எதிர்க்கட்சிகள் கூட்டாகத் தீர்மானித்தள்ளன.

பாண் கூட உண்ண முடியாத நிலையில் மக்கள் இருக்கிறார்கள். 20 இலட்ச தொழில்வாய்ப்புகள் நாட்டில் இல்லாமல் போயுள்ளன. எனினும் இவ்வாறான நிலையிலும் மக்களிடமிருந்து பணத்தை பறிப்பதற்கு அரசாங்கம் வரித் திருத்தங்களை மேற்கொண்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

பொதுமக்கள் கருத்துகளை பெற்றுக்கொள்ள

# டிஜிட்டல் தளம் உருவாக்கப்படும்



பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான குறுகிய மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவையின் உப குழுவுக்கு பொதுமக்கள் கருத்துகளைப் பெற்றுக்கொள்ள டிஜிட்டல் தளம் உருவாக்கப்படும் என குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக ரணவக்க நேற்று (13) தெரிவித்தார்.

உப குழுவுக்கான நிபுணத்துவ கருத்துகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் நேற்று பாராளுமன்றத்தில் கூடிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இந்தக் கூட்டத்தில் இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் பேராசிரியர் ரொஹான் சமரஜீவ ஆகியோர் கலந்துகொண்டதுடன் நாட்டின் தற்போதைய கடன் நிலைமை மற்றும்

சர்வதேச நாணய நிதியத்துடன் செயற்படும் போது ஏற்படும் கொள்கை ரீதியான நிலைமைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இங்கு இலங்கை மத்திய வங்கியின் பொதுக் கடன்கள் திணைக்களத்தின் கலாநிதி எம்.இஸட்.எம். ஆஸீம் கருத்துத் தெரிவிக்கும் போது, எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் தற்போதைய நிலைமையில் சில ஆறுதலான மாற்றங்கள் ஏற்படும். இதன்போது இலங்கையில் குடும்பங்கள் தொடர்பான ஆய்வை உடனடியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்தார்.

# ஐயா அவர்களே! மன்னிக்கவும்

வ.சக்தி

எனது முகநூல் பதிவினூடாக பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்மந்தனின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாகவும், அதற்காக மன்னிப்பு கேட்பதாகவும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பிரதிச் செயலாளர் யோகராஜா சந்திரகுமார் தெரிவித்துள்ளார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனிடம் மன்னிப்பு கோட்டுள்ளார்.



மட்டக்களப்பிலுள்ள கிழக்கு ஊடக மன்றத்தில் நேற்று (13) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிபோதே அவர் மேற்கண்டவாறு மன்னிப்பு கேட்டுக்கொண்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், பாராளுமன்றத்துக்கு சம்பந்தன் 19.07.2021 அன்று வருகை தந்தமையினை வீடியோவாக முகப்புத்தகத்தில் பதிவேற்றம் செய்திருந்தேன்.

எனது முகநூல் பதிவினூடாக பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்மந்தனின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாகவும் குறித்த பதிவு தொடர்பில் விசாரணை நடத்தவேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் 06.08.2021 அன்று தனதுரையில் தெரிவித்திருந்தார்.

# ஏற்றுமதிக்கான உதவிகளை வழங்குவோம்

## முக்கிய வர்த்தக சபைகளிடம் வெளிவிவகாரத்துறை அமைச்சர் வாக்குறுதி



நாட்டின் ஏற்றுமதித் துறைக்குத் தேவையான பொருளாதார முன்னேற்றம் மற்றும் உதவிகளை வழங்குவதாகவும், தனியார் துறை, சபைகளுடன் ஒத்துழைத்து அவர்களின் வர்த்தக முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு அமைச்சு உறுதிபூண்டுள்ளதாகவும் ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்கள் மற்றும் வர்த்தக சபைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளிடத்தில் வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஏற்றுமதியாளர்களுக்கான வாய்ப்புகள் மற்றும் சாத்தியக்கூறுகள், இலங்கையின் சரக்குகள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்வதில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக, வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி, ஏராளமான ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்கள் மற்றும் வர்த்தக சபைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள், பொதுச் செயலாளர்கள், வணிகத் தலைவர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் சபைகளுடனான இந்தச் சந்திப்பு, வணிக சமூகத்தின் வணிக முயற்சிகளை மேம்படுத்துவதற்கும், ஏற்றுமதியை அதிகரிப்பதற்கும் அமைச்சு உதவக்கூடிய மற்றும் எளிதாக்கக்கூடிய மிகவும் பயனுள்ள நடவடிக்கைகள் சார்ந்த கருத்துகள், யோசனைகள் மற்றும் முன்மொழிவுகளைப் பெறுவதற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சால் நடத்தப்பட்டது.

தனியார் துறை, சபைகளுடன் ஒத்துழைத்து அவர்களின் வர்த்தக முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு அமைச்சு உறுதிபூண்டுள்ளதாகவும், இதன் மூலம் நாட்டின் ஏற்றுமதித் துறைக்குத் தேவையான பொருளாதார முன்னேற்றம் மற்றும் உதவிகளை வழங்குவதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார். அமைச்சின் கீழ் உள்ள அனைத்து தூதரகங்களும், தனியார் மற்றும் பெறுநிறுவனத் துறையின் பொருளாதார மற்றும் வர்த்தக நோக்கங்களை அடைவதில் அவர்களுக்கு உதவி, எளிதாக்குவதற்காக வெளிநாடுகளில் உள்ள திறப்புக்களை தனியார் துறையுடன் இணைப்பதில் தொடர்ந்தும் தொழில்ரீதியாக ஈடுபடுவதாகவும் அவர் உறுதியளித்தார்.



# சொல்ஹெய்ம் கூட்டமைப்பை சந்தித்தார்

நோர்வேயின் முன்னாள் அமைச்சரும், இலங்கைக்கான முன்னாள் சமாதான தூதுவருமான எரிக் சொல்ஹெய்மிற்கும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைகள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டிருந்ததாகவும், பொருளாதார மீட்சி, பசுமையான அபிவிருத்திகள், அரசியல் சீர்திருத்தம் தொடர்பில் ஆராயப்பட்டதாகவும் சாணக்கியன் எம்.பி தெரிவித்தார். அத்துடன் ‘பாராளுமன்ற உறுப்பினர்களும் பழைய நண்பர்களுமான எம்.ஏ சுமந்திரன் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோருடன் கொழும்பில் சந்தித்து உரையாடியிருந்தேன்’ என எரிக் சொல்ஹெய்ம் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

புதன்கிழமை (12) இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட எரிக் சொல்ஹெய்ம், ஜனாதிபதி ரணில், மஹிந்த, ஹாபிஸ் நசீர் அஹமட் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

22ஐ திருத்தினால்

# வாக்களிக்காமல் இருப்பதே நல்லது

பா.நிரோஸ்



இம்மாதம் 21ஆம், 22ஆம் திகதிகளில் அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச்சட்டமூலம் தொடர்பில் பாராளுமன்றத்தில் இரண்டு நாள்கள் விவாதம் முன்னெடுக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நீதி அமைச்சில் நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். 22ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் பல திருத்தங்களை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ வழங்கியுள்ளார். அதுபோல, உயர்நீதிமன்றமும் பல திருத்தங்களை பரிந்துரைத்துள்ளது. எனவே, 22ஆவது திருத்தச் சட்டமூலத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவித்திருக்கிறோம்.

இதற்கு மாறாக அரசியலமைப்புக்கு புறம்பாக எந்தவொரு திருத்தங்களும் 22ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளடக்கப்படாது. அவ்வாறு உள்ளடக்கப்பட்டால் இச்சட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்காமல் இருப்பதே நல்லது. உள்ளூராட்சி மன்ற தேர்தல் திருத்தங்களுக்கும் 22ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை என்றார்.

முல்லைத்தீவு மீனவர்களின்

# போராட்டம் வெற்றி; அதிகாரிக்கு இடம்மாற்றம்

■ செ. கீதாஞ்சன்



முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் கோரிக்கையுடனான போராட்டம், வெற்றி அளித்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் சம்மேளன தலைவர் அ.அருள்நாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று (13) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இதனை தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறியதாவது:

கடந்த 03 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கடற்தொழிலாளர்களின் போராட்டம் 06 ஆம் திகதி பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைவாக கைவிடப்பட்டது.

அதற்கமைய, எங்களின் கோரிக்கைக்கு அமைவாக, சட்டவிரோத கடற்தொழில் நடவடிக்கைக்கு உடந்தையாக இருந்த நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளருக்கு இடம் மாற்றம் வழங்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்துக்கு புதிதாக வரவுள்ள அதிகாரிக்கு ஆதரவாக, நாங்கள் அனைவரும் ஒத்து நிற்போம்.

சட்டவிரோதமான தொழில் செய்பவர்களும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடினார்கள், ஆனால், அமைச்சர் சட்டவிரோதமான தொழில் செய்யமுடியாது என்று தெரிவித்துவிட்டார். கடற்றொழில் அமைச்சரின் இந்த முடிவை வரவேற்கின்றோம். இந்த விடயம் சரியாக நடைபெறுமாக இருந்தால் மேலும் அமைச்சருக்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

நாங்கள் வைத்த கோரிக்கைக்கு அமைய சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைக்கு உடந்தையாக இருந்த ஏனைய இரண்டு அதிகாரிகளையும் மாற்றம் செய்யவேண்டும். அதையும் அமைச்சர் செய்து தருவாரென நம்புகின்றோம்.

இனிவரும் அதிகாரிகளுடன் மீனவ சமூகங்கள் ஒன்றிணைந்து, சட்டவிரோத தொழில் நடவடிக்கையை இல்லாமல் செய்தான்தான் மீனவர்கள் வாழமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மகளை துஷ்பிரயோகம் செய்த

## தந்தைக்கு விளக்கமறியல்

■ செந்தூரன் பிரதீபன்

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிராமம் ஒன்றில், தனது 6 வயது மகளை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய தந்தையை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிறுமியின் தாய் மனநலம் பாதிக்கப்பட்டவர் எனவும் அவர் கர்ப்பமடைந்துள்ள நிலையில், தந்தை பாலியல் ரீதியில் மகளைத் துன்புறுத்தி உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர், ஹெரோயின் போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனவும் இந்நிலையிலேயே மகளை தொடர்ச்சியாக பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கி வந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். மாநகரில் பொதுஇடத்தில் குப்பை கொட்டினால், மலசலம் கழித்தால்

## வெற்றிலை துப்பினால் தண்டம்




■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் பொது இடங்களில் குப்பை கொட்டுதல் , வெற்றிலை துப்புதல், மலசலம் கழித்தல் ஆகியவற்றுக்கு தண்டப்பணம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், தீவிரமாக கண்காணிக்கப்பட்டு, குற்றம் இழைத்தவர்களுக்கு உடனடியாகவே தண்டம் அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என யாழ். மாநகர சபை உறுப்பினரும் சுகாதர குழு தலைவருமான வ. பார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், கழிவுகளை உரிய முறையில் அகற்றும் செயற்பாடுகள் உள்ள போதிலும் , பலரும் கழிவுகளை உரிய இடங்களில் போடாது, வீதிகள், பொது இடங்களில் வீசி விட்டுச் செல்கின்றனர். அதனால் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுகின்றன.

கடந்த காலங்களில் இருந்த தண்டப்பணத்தை தற்போது சபையின் அனுமதியுடன் திருத்தியுள்ளோம். பொது இடங்களில் குப்பை கொட்டுதலுக்கு ஐயாயிரம் ரூபாயும் வெற்றிலை துப்பினால் இரண்டாயிரம் ரூபாயும் பொது இடத்தில் மலசலம் கழித்தால் ஐயாயிரம் ரூபாயும் தண்டம் அறவிடப்படும் எனத் தெரிவித்தார்.



## ஓமந்தையில் மின்னல் தாக்கி 11 மாடுகள் பலி

■ க. அகரன்

வவுனியா, ஓமந்தையில் மின்னல் தாக்கி 11 மாடுகள் பலியாகியுள்ளன. நேற்றுமுன்தினம் (12) மாலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிநவருவதாவது:

ஓமந்தை, அரச முறிப்பு பகுதியில், மாலை நேரம் மாடுகள் மேய்ந்து கொண்டிருந்த போது, மழை பெய்த்துள்ளது. இதனால், மாடுகள் மரமொன்றின் கீழ் நின்றுள்ளன. அந்நேரத்தின் மின்னல் ஏற்பட்டு மாடுகளை தாக்கியமையால் 11 மாடுகள் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளன.

போதைப்பொருள் தொடர்பில் கைதாகும்

## மாணவர்களை சிறையில் அடைக்கக்கூடாது

■ எம். றொசாந்த்

போதைப்பொருள் பாவனை தொடர்பில் கைதாகும் மாணவர்களை சிறைப்படுத்தும் நடவடிக்கைகளை கைவிட்டு, சரியான மருத்துவத்தை பெற்றுக்கொடுத்து உளவள ஆலோசனைகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆரோக்கியத்துக்கான இளையோர் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடமாகாண இளைஞர், யுவதிகள் மத்தியில் ஐஸ், கஞ்சா போன்ற உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனை மிக வேகமாக அதிகரித்து வருகின்றது. நம்முடைய அதிகாரிகள், தன்னார்வ தொண்டு அமைப்புகளுடன் இணைந்து, போதைவஸ்து பாவனைக்கு எதிராக போராடி வருகின்றமை பாராட்டத்தக்கது. அவர்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டியது நம் அனைவரின் கடமையாகும். எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## முதல்நிலை மாணவர்களுக்கு கௌரவம்

■ செ. கீதாஞ்சன்



முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் வெளியான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் தோற்றி, மாவட்டத்தில் முதல் 10 நிலையை அடைந்த மாணவர்களை 'நாளை முல்லைத்தீவு அமைப்பு' கௌரவித்து ஊக்கப்படுத்தியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கல்வியின் வளர்ச்சிக்காக உழைத்துவரும் 'நாளை முல்லைத்தீவு அமைப்பின் தலைவர் க. விஜிந்தன் தலைமையில் மாஞ்சோலையில் உள்ள திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில், மாவட்டத்தின் இரண்டு கல்வி வலயங்ளிலும் மாவட்டத்தில் முதல் 10 நிலை வரை பெற்ற 60 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.

# "அரசாங்கம் எங்களை பயமுறுத்த முடியாது"

ஜனா எம்.பி தெரிவிப்பு

■ கே.எல் ரியுதாஜித், வ. சக்தி, வா. கிருஸ்ணா



பாதிக்கப்பட்ட மக்களை நினைவுகூரும் எங்களைத் தண்டிக்கும் அளவுக்கே, இந்த நாட்டின் ஜனநாயகம் இருக்கின்றது என பாராளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோ. கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

2022 ஜனவரி மாதம் கொக்கட்டிச்சோலைப் படுகொலை நினைவேந்தலை அனுஷ்டித்தமைக்காக பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தகவலறிந்து, நீதிமன்றில் முன்னிலையாகிய பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

இந்த நாட்டின் ஜனநாயக ஆட்சி, எங்களை நீதிமன்றம் வரை கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றது. கொக்கட்டிச்சோலைப் படுகொலை, 1987ஆம் ஆண்டு மகிழடித்தீவு இறால் பண்ணையில் எந்தவித போராட்ட இயக்கங்களுடனும் தொடர்புபடாத பொதுமக்களை, இலங்கை அரச படைகள் கொன்று குவித்தனர். அவ்வாறு கொல்லப்பட்ட எமது உறவுகளின் நினைவாக, மகிழடித்தீவு சந்தியிலுள்ள நினைவு தூபியில், ஆண்டு தோறும் நினைவுகூர்வது வழமை.

இம்முறை இந்நிகழ்வுக்கு எவராலும் தடையுத்தரவு வழங்கப்படவில்லை என்பதோடு, தடைத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தாலும் அதனை மீறியமைக்கான வழக்குக்கான அழைப்பாணை எமக்கு வழங்கப்பட்டு, நீதிமன்றம் செல்லாமல் இருந்திருந்தாலும் பரவாயில்லை. நிகழ்வுக்கான தடையும் தரப்படவில்லை; வழக்கிற்கு வருமாறு அழைப்பாணையம் இல்லை. ஆனால் இடையில் எமக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதாக அறியக் கிடைத்தது. இந்நிலையில், இன்றை தினம் (நேற்று) நீதிமன்றில் ஆஜராகியிருந்தோம். எதிர்வரும் நவம்பர் மாதம் இரண்டாம் திகதிக்கு வழக்கு மீண்டும் போடப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் நடக்கின்ற விடயங்களை, சர்வதேசம் அறிந்து வைத்துள்ளது. இந்த வேளையில், ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய இந்த அரசு, பாதிக்கப்பட்ட மக்களை நினைவுகூரும் எங்களைத் தண்டிக்கிறது. இவ்வாறாக பயமுறுத்துவதன் ஊடாக, எமக்காக உயிர்நீத்த மக்களை, நாங்கள் நினைவு கூருவதைத் தடுத்து விடலாம் என்று நினைக்கின்றது. அது முடியாத காரியம்; நாங்கள் எமக்காக உயிர்நீத்த எமது மக்களை, தொடர்ச்சியாக நினைவுகூர்ந்து கொண்டே இருப்போம் என்று தெரிவித்துள்ளார்.

இதேபோன்று, தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேசும், நீதிமன்றில் இன்று ஆஜரான நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

## சதா சரவணபவனின் நூலும் பல்திறன் வட்டும் வெளியீடு




■ கே.எல்.ரியுதாஜித்

'தமிழரியல்' இணையத் தொலைக்காட்சி பணிப்பாளர் சதா சரவணபவனின் 'தீட்டு வீடு' நாடக நூல் மற்றும் 'ஓம் நாதம்' பல்திறன் வட்டு ஆகியவற்றின் வெளியீடு ஞாயிற்றுக்கிழமை (16) காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு, தேவநாயகம் மண்டபத்தில், இசை இளவல் ஜீவம் ஜோசப் அரங்கில் வெளியீட்டு வைக்கப்படவுள்ளது.

மூத்த எழுத்தாளர் தமிழறிஞர் கலாநிதி அகளங்கள் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், ஆசியுரையினை இராமகிருஷ்ண மிசன் மட்டக்களப்பு சுவாமி நீலமாதவானந்தஜீ மஹராஜ் வழங்க, அறிமுகவுரையினை எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் மேலாளர் குழந்தை எழுத்தாளர் டொக்டர் ஓ.கே குணநாதன் நிகழ்த்தவுள்ளார்.



## முரண்பாட்டு தீர்வுகள்

■ எம்.என்.எம் அப்ராஸ்

சமூக அபிவிருக்கான நிறுவனத்தினால் (ISD)அம்பாறை மாவட்டத்திலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு முரண்பாட்டு தீர்வுகள் தொடர்பான இரு நாள் செயலமர்வு செவ்வாய், புதன் (11, 12) ஆகிய கிழமைகளில் காரைதீவு தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

சமூக அபிவிருக்கான நிறுவனத்தின் பிராந்திய திட்ட உத்தியோகத்தர் எம்.எஸ்.ஜலீல் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.சி.ஏ அஸீஸ் வளவாளராக கலந்து கொண்டிருந்தார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள சுமார் 40 இளைஞர், யுவதிகள் இச்செயலமர்வில் கலந்து கொண்டிருந்தனர்.

## கலப்பையில் சிக்கிய வெடிபொருட்கள் மீட்பு

■ கனகராசா சரவணன்



மட்டக்களப்பு, சின்ன புல்லுமாலையில் புதைத்துவைக்கப்பட்ட வெடிமருந்துகளையும். புலிபாய்ந்தகல் காடுப்பகுதியில் இருந்து ரி 56 ரக துப்பாக்கியும் ரவைகளையும் நேற்றுமுன்தினம் (12) மாலை விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் மீட்டுள்ளனர்.

கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள சின்ன புல்லுமலை வயல்பகுதியில், உழவு இயந்திரத்தால் வயலை உழுதபோது, பெரலின் மூடி வெளியே வந்தததை அடுத்து, நிலத்தைத் தோண்டியபோது நிலத்தில் புதைத்துவைக்கப்பட்ட பரலில் வெடிபொருட்கள் இருந்தன.

இதையடுத்து, பரலில் இருந்து பாதுகாப்பாக பொலித்தீனில் சுற்றப்பட்ட பெருமளவிலான வெடி மருந்துகளை பொலிஸார் மீட்டனர். இந்தப் பகுதி, முன்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சந்திவெளி பொலிஸ் பிரிவிலுள்ள கோரவெளி காட்டுப் பகுதியில் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருடன் இராணுவ புலனாய்வு பிரிவினர் குறித்த காட்டுப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி 56 ரக துப்பாகியையும் ரவைகளையும் மீட்டனர்.

திருக்கோவில் இல்மனைட் அகழ்வு:

## உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு கடிதம்

**தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்துக்கு ஜனாதிபதி செயலகத்திலிருந்து பதில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**

■ வி.ரி சகாதேவராஜா

அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவுள்ள இல்மனைட் அகழ்வு விவகாரம் தொடர்பாக, தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்துக்கு ஜனாதிபதி செயலகத்திலிருந்து பதில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தின்படி, திருக்கோவில் இல்மனைட் விவகாரம் தொடர்பாக, எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்பதாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு, அம்பாறை மாவட்ட செயலாளரிடம் கேட்கப்பட்டுள்ளது.

குறித்த இல்மனைட் அகழ்வுக்கு எதிராக, பிரதேச மக்களிடமிருந்து பாரிய எதிர்ப்பலைகள் கிளம்பி வருவது குறிப்பிடத்தக்கது.

மீராவோடை பொது நூலகத்தில்

## விசேட தேவை உடையவர்களும் வாசகராக சேர்ப்பு

■ ஆர். ஜெயஸ்ரீராம்

தேசிய வாசிப்பு மாதம் ஒக்டோபர் 2022 முன்னிட்டு கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் நிர்வாகத்திற்கு உட்பட்ட மீராவோடை பொது நூலகத்தில் நேற்று (13) விசேட தேவையுடவர்களின் மன உள விருத்திக்கான கருத்தரங்கும் அவர்களை வாசகராக நூலகத்தில் சேர்த்துக் கொள்ளும் நிகழ்வும் நூலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது, விசேட தேவையுடையவர்களின் பெற்றோர், பாதுகாவலர்களுக்கான அறிவுரைகளும் வழங்கப்பட்டன. குறித்த நிகழ்வுக்கான அனுசரணையை 'அவிசன்னா குளோபல் பல்கலைக் கழகம்' வழங்கியிருந்தது.

நுவரெலியா பிரதேச சபையில்

# பாதீடு நிறைவேற்றம்

ஆ.ரமேஸ்

நுவரெலியா பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாதாந்த அமர்வு சபை தவிசாளர் வேலு யோகராஜ் தலைமையில் நேற்று (13) காலை ஆரம்பமான போது, 23 உறுப்பினர்களில் 20 உறுப்பினர்கள் சபைக்கு சமூகமளித்திருந்தனர்.

இதன்போது தவிசாளரால் 2023ஆம் ஆண்டுக்கான பாதீட்டு அறிக்கை சபையில் சமர்பிக்கப்பட்டிருந்தது.



சபையின் 18 உறுப்பினர்கள் இதற்கு ஆதரவாக வாக்களித்த நிலையில், ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினரான அஜீத் உயாங்கொட மாத்திரம் இதற்கு எதிராக வாக்களித்தார்.

மேலும் தமிழ்முற்போக்கு கூட்டணி, மக்கள் விடுதலை முன்னணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பவற்றின் உறுப்பினர்கள் மூவர் நேற்றைய சபை அமர்வில் கலந்துகொள்ளாத நிலையில், நுவரெலியா பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான பாதீடு 18 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

# சீனாக்கொலையில் சிக்கிய சிறுத்தை உயிருடன் மீட்பு

எஸ்.கணேசன்

பொகவந்தலாவ, செப்பல்ட்டன் (சீனாக்கொல) தோட்டத்தின் மேற்பிரிவில், வலையில் சிக்கியிருந்த சிறுத்தையொன்று 8 மணி நேரம் போராட்டத்தின் பின்னர், மயக்க ஊசி செலுத்தப்பட்டு, உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

மூன்று அடி நீளமான ஆண் சிறுத்தையொன்று வலையில் சிக்கியிருப்பதை அறிந்த தோட்ட மக்கள், தோட்ட அதிகாரிக்கு நேற்று முன்தினம் (12 ) காலை தகவல் வழங்கியுள்ளனர்.

பின்னர் அதிகாரி பொகவந்தலாவை பொலிஸாருக்கு தெரியப்படுத்திய பின்னர், பொலிஸார் ஊடாக நல்லத்தண்ணி வனவிலங்கு அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்டது.

மரக்கறி தோட்டமொன்றில், மிருகங்களிடமிருந்து விளைச்சலை பாதுகாக்கும் நோக்கில் போடப்பட்டிருந்த



கம்பி வலையிலேயே சிறுத்தை சிக்கியுள்ளதுடன், மக்கள் நடமாட்டத்தை கண்டதும் வலையை பிய்த்துக்கொண்டு ஓடியதால் தேயிலை மலைப்பகுதியில் சிக்கியுள்ளது.

இதன் பின்னர், ரந்தெனிகல மிருக வைத்தியசாலையிலிருந்து, மிருக வைத்தியர் வரழைக்கப்பட்டு, துப்பாக்கி மூலம் மயக்க மருந்து ஊசி செலுத்தப்பட்டு, சிறுத்தை பாதுகாப்பாக மீட்கப்பட்டது.

சிகிச்சைகளுக்காக மினிப்பே மிருக வைத்தியசாலைக்கு சிறுத்தை கொண்டு செல்லப்பட்டதுடன், குணமடைந்த பின்னர் சரணாலயத்தில் விடப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# நூல் அறிமுகவிழா

மலையகத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய கவிதாயினிகளில் ஒருவரான எஸ்தர் நதனியலின் 'பெருவெடிப்பு மலைகள்' எனும் கவிதை நூல் அறிமுக நிகழ்வு கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நாளை (15) நடைபெறவுள்ளது.

பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வை, நாக ஸ்ரீ கங்காதரன் தலைமை தாங்கவுள்ளதுடன், பேராசிரியர் சித்ரலேகா மௌனகுரு, கவிஞர் சு. முரளிதரன், தில்லைநாதன் பவித்ரன், செ. ஞானராசா, சிவனு மனோகரன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

நூலின் முதற் பிரதியை பூபாலசிங்கம் புத்தகசாலையின் உரிமையாளர் ஸ்ரீதர்சிங் பெற்றுக்கொள்ளவுள்ளதுடன், சிறப்பு பிரதியை மு. சுரேந்திரன் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

வரவேற்புரையை ஊடகவியலாளர் மஹேஸ்வரி விஜயனந்தனும் ஏற்புரையை கவிஞர் எஸ்தரும் நிகழ்த்தவுள்ளனர்.



# நூல்கள் வழங்கி வைப்பு

நானுஓயா, கார்ல்ஸ்பேக் தமிழ் வித்தியாலயத்துக்கு நூல்கள் கையளிக்கும் நிகழ்வு, பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. ரேஹா ஸ்டீல் உரிமையாளர் திருச்செல்வம் ஊடாக இந்நூல்கள் கையளிக்கப்பட்டன. (நீலமேகம் பிரசாந்த்)

# கோப்பி கன்றுகளும் விதைகளும் பகிர்ந்தளிக்கப்பட்டன

பி.கேதீஸ்

நுவரெலியா மாவட்டத்தில் கோப்பி பயிர் செய்கையை அபிவிருத்தி செய்வதற்காக, ஜப்பான் நாட்டு கியோதோ நிறுவனத்தின் அனுசணையுடன் 30 ஆயிரம் கோப்பி கன்றுகளும் 40 கிலோ கிராம் கோப்பி விதைகளும் பகிர்தளிக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஹங்குராங்கெத்த பிரதேசத்தில் இடம்பிடிய கிராமத்தில் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றதுடன்,



நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட ஆரம்பித்து வைத்தார். அங்குள்ள மக்களுக்கு 8 ஆயிரம் கோப்பி கன்றுகளும் கோப்பி விதைகளும் வழங்கிவைக்கப்பட்டன.

# உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன




எஸ்.கே.குமார்

நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் 250 குடும்பங்களுக்கு, 10,000 ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு நுவரெலியா புதிய நகர மண்டபத்தில் நடைபெற்றது.

# பிரிந்த 2 சிறுத்தைக் குட்டிகளை இணைத்துக் கொண்ட தாய்ச் சிறுத்தை



ரஞ்சித் ராஜபக்ஷ

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இன்ஜஸ்ட்ரி (கிருமகொல) தோட்டத்தில் தாயைப் பிரிந்து தனித்து இருந்த இரண்டு சிறுத்தைக் குட்டிகள், மீண்டும் தாயிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பிறந்து 10 நாள்களேயான குறித்த இரண்டு சிறுத்தைக் குட்டிகளும் நல்லத்தண்ணி வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளால் தாயிடம் விடப்பட்டுள்ளன.

கொழுந்து பறிப்பதற்காகச் சென்ற தொழிலாளர்கள், சிறுத்தைக் குட்டிகளைக் கண்டு தோட்ட நிர்வாகத்துக்கு அறிவித்துள்ளனர்.

பின்னர் தோட்ட நிர்வாகம் ஊடாக நல்லத்தண்ணி வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஸ்தலத்துக்கு வருகை தந்த அதிகாரிகள், குட்டிகள் இரண்டும் காணப்பட்ட இடத்திலேயே குட்டிகளைப் பாதுகாப்பாக மீண்டும் வைத்துள்ள நிலையில், சிறிது நேரத்தில் தாய் சிறுத்தை அதே இடத்துக்கு குட்டிகளை தேடி வந்து குட்டிகளை எடுத்துச் சென்றதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மாணவன் திரும்பி வந்தார்

ஷேன் செனவிரத்ன

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற நிலையில், காணாமல் போயிருந்த பொறியியல் பீடத்தைச் சேர்ந்த மாணவனொருவர் 10 நாள்களின் பின்னர், மீண்டும் பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்துள்ளார்.

கடந்த இரண்டாம் திகதி கடிதம் ஒன்றை எழுதி வைத்து விட்டு, காணாமல் போயிருந்த நிலையில், பல்கலைக்கழகத்துக்கு நேற்று முன்தினம் (13) மாலை திரும்பி வந்துள்ளார் என பல்கலைக்கழகத்தின் உப பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

# சா/த மாணவர்களுக்கான கருத்தரங்கு

சிவாணி ஸ்ரீ

ஹொரண கல்வி வலய பாடசாலை கல்வி பொதுத் தராதர சாதாரண தர மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான பாடக் கருத்தரங்கு மே/ஹொ ஹொரண தமிழ் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் ரி. ஸி ஜீவயோஹினி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இலங்கை கோபியோ நிறுவனத்தின் பூரண அனுசரணையிலும் அதன் கல்வி செயற்பாட்டாளரும் தோட்டப் புற மக்களுக்கு உதவி கரம் நீட்டிவரும் தொழிலதிபர்



வீ.கே பாலசுப்பிரமணியத்தின் ஏற்பாட்டிலும் நடைபெற்ற இக்கருத்தரங்கு, முன்னாள் அதிபரும் விஞ்ஞான பாட சிறப்பு ஆசிரியருமான எச். எம்.எம் பாசில் முதலாவது கட்டமாக விஞ்ஞான பாட கருத்தரங்கை நடத்தினார்.

# பொதுக் கூட்டம்

கண்டி, திகன, க/ இரஜவெல்ல இந்து தேசிய கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொது கூட்டமும், 2022 / 2024 ஆம் ஆண்டுக்கான பழைய மாணவர் சங்கத்தின் புதிய செயற்குழு தெரிவு செய்யும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (16) காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.



# பொல்கொல்லயில் வான்கதவு திறப்பு

மொஹொமட் ஆஸிக்

பொல்கொல்ல நீர்த்தேக்கத்தின் வான்கதவு ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

மகாவலி கங்கையின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளதால் பொல்கொல்லை நீர்த் தேக்கத்தின் வான் கதவுகளில் ஒன்று நேற்று ( 13 ) காலை முதல் திறக்கப்பட்டுள்ளதாக மகாவலி அதிகார சபை தெரிவிக்கின்றது.

குறித்த வான் கதவு ஓர் அடி மூன்று அங்குலம் வீதம் திறக்கப்பட்டுள்ளதாகவும் அதன் மூலம் செக்கனுக்கு 1,250 கன அடி நீர் வெளியேறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**“ மகாவலி கங்கையின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளதால் பொல்கொல்லை நீர்த் தேக்கத்தின் வான் கதவுகளில் ஒன்று ஓர் அடி மூன்று அங்குலம் வீதம் திறக்கப்பட்டுள்ளது**

# தமிழ்மொழி தினப் போட்டிகள்





மத்திய மாகாண தமிழ் மொழி தினப் போட்டிகள், கம்பளை ஸாஹிராக் கல்லூரியில் ஒக்டோபர் 8ஆம் திகதி இடம்பெற்றன.

மத்திய மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருந்ததி சத்தியேந்திரா தலைமையில், மாகாணக் கல்விப் பணிப்பாளர் பி. அமரசிரி பியதாஸவின் வழிகாட்டலின் கீழ் இப்போட்டிகள் இடம்பெற்றன.

தனி நிகழ்ச்சிகளும் குழு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. தரம்



10,11,12, 13 ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த 4,5 ஆகிய பிரிவுகளுக்கான 29 தனி மற்றும் குழுப் போட்டி நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இதன்போது மத்திய மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருந்ததி சத்தியேந்திரா மற்றும் மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் பெ.விக்னேஸ்வரன் ஆகியோர் உரையாற்றுவதையும் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம். (மெய்யன்)

# தொழிலாளிகளை கடனாளிகளாக்கும் முற்பணமும் தீபாவளி பண்டிகையும்

புலரும் ஒவ்வொரு பொழுதுகளையும் எவ்வாறு கடத்துவதென சிந்தித்தே பலரும் நாள்களைக் கடத்திக்கொண்டிருக்கின்றனர். அந்தளவுக்கு ஏவுகணை வேகத்தில் பொருட்களின் விலைகளும் சேவைகளின் கட்டணங்களும் அதிகரித்துள்ளன. இதனிடையே, புதிதாக அதிகரிக்கப்பட்ட வருமான வரியால், நடுத்தர குடும்பங்களும் இனிமேல் ஆட்டங்காணும்.

நாட்டின் அந்நிய செலாவணிக்கு முதுகெலும்பாய், மாடாய் உழைத்து, ஓடாய் தேய்ந்து, கூனிக் குறுகிக்கொண்டே வாழும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள், சொல்லொண்ணா துன்பத்துக்குள் விழுந்து துடிதுடித்துக்கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கான நாளாந்த ஆகக்குறைந்த சம்பளமான 1,000 ரூபாயை வைத்து வாழ்க்கையை கொண்டுநடத்த முடியாமல் திணறுகின்றனர்.

இதற்கிடையே இன்னும் பத்து நாள்களில், தீபாவளி திருநாள் வரவிருக்கிறது. முன்னைய காலங்களில், வீடுகளைச் சுத்தப்படுத்தி, நிறங்களை பூசி, சுண்ணாம்பு அடித்து, குடும்பமாகச் சென்று புத்தாடைகளை கொள்வனவு செய்து, இரண்டொரு வாரத்துக்கு முன்பிருந்தே பலகாரங்களை வகைவகையாகச் சுட்டு தீபாவளிக்கு ஆயத்தமாகிவிடுவர்.

ஆனால், இம்முறை தீபாவளி முற்பணம் இழுபறியில் இருப்பதால், முன்னாயத்தங்களும் இன்றி, சலிப்படைந்து நிற்கின்றனர். பெருந்தோட்ட நிறுவனங்களும் முற்பணம் தொடர்பில் எவ்விதமான கரிசனையும் இல்லாமல் இருக்கிறது. தொழிற்சங்கங்கள் 15 ஆயிரம் ரூபாயை முற்பணமாக வழங்கவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளன.

பெருந்தோட்டங்களுக்கு வெளியே வாழ்கின்றவர்கள் ஒவ்வொரு பெருநாள்களையும் மிகவும் சந்தோஷமாக, எவரிடமும் கையேந்தாமல், இன்னும் பத்து மாதங்களுக்கு கடனாளியாகாமல் குடும்பத்துடன் குடும்பங்களாக ஒன்றிணைந்து கொண்டாடுவதை அவதானித்து இருகின்றோம். ஆக அவர்களிடத்தில், பெருநாள் செலவுக்கான சேமிப்பு இருக்கிறது. இல்லையேல், கைமாற்றாக கடன்வாங்கி, கொண்டாடுகின்றனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மட்டுமே, முற்பணத்தை வாங்கிக்கொண்டு இன்னும் பத்துமாதங்களுக்கு கடனாளியாகவே வாழ்கின்றனர். அடுத்தவருட தீபாவளிக்கும் முற்பணம் பல்லவியைப் பாடி, மீண்டும்மீண்டும் கடனாளியாகிவிடுகின்றனர்.

தீபாவளி பண்டிகைக்கு பல கதைகள் கூறப்பட்டாலும் தீபாவளியை தீ ஒளி என்றே முன்னோர்கள் கூறியிருக்கின்றனர். தீமை அகன்று நன்மை பிறக்கும் ஒளி என்கின்றனர். ஒளி என்பது வெற்றியின் அடையாளமாகும். எனினும், மிகவும் சிறப்பான முறையில் தீபாவளியைக் கொண்டாடும் பெருந்தோட்ட மக்கள், தீபாவளிக்கு முன்னரே கடனாளியாகி, தீமையெனும் இருளுக்குள் விழுந்துவிடுகின்றனர்.

அதன்பின்னர், தீபாவளி முற்கொடுப்பணவு ஒவ்வொரு மாதமும் தங்களுடைய சம்பளத்தில் கழிக்கப்படும். விலைவாசி அதிகரிப்புக்கு ஈடுகொடுக்க முடியாமல் அல்லல்படும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள், தீபாவளி முற்பணத்தை பெற்றுக்கொள்ளாது கொண்டாடுவதற்கு முயல்வதே நல்லது என்பதை வலியுறுத்துகின்றோம்.

ஒரு பண்டிகையை கடனாளியாகி கொண்டாடுவதை விடவும், குறைந்த செலவுடன் இவ்வருட பண்டிகையை கொண்டாடு. அடுத்தடுத்த வருடங்களில் பண்டிக்கை செலவுக்காக சேமித்து, அதிலிருந்து பணத்தை மீளப்பெற்று கொண்டாடுவதற்கு முயற்சி செய்தலே புத்திசாலித்தனமாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## உலகளாவிய உணவு நெருக்கடி:

# தற்செயலானதா, திட்டமிடப்பட்டதா?



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்ரெஸ், அண்மையில் 'பசியின் சூறாவளி மற்றும் உலகளாவிய உணவு முறையின் உருக்குலைவு' குறித்து கவலையுடன் பேசினார்.

விநியோகச் சங்கிலிகள் சீர்குலைந்து உணவு, எரிபொருள், உரங்களின் விலைகள் விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்து வருவதாகவும், இது ஏழைகளைக் கடுமையாகப் பாதித்து, உலகம் முழுவதும் அரசியல் ஸ்திரமின்மை, அமைதியின்மைக்கு வித்திடுவதாகவும் அவர் கூறினார்.

உலகளாவிய உணவு நெருக்கடி பற்றி எமக்குச் சொல்லப்பட்டாலும், நிலையான உணவு முறைகள் குறித்த சர்வதேச நிபுணர்கள் குழுவின் கூற்றுப்படி, தற்போது போதுமான உணவு உள்ளது; உலகளாவிய உணவு வழங்கல் பற்றாக்குறை அபாயம் இல்லை என்பதாகும்.

உணவுப் பொருட்கள் ஏராளமாக இருந்தாலும், விலைவாசி உயர்வைக் காண்கிறோம். பிரச்சினை, உணவுப் பற்றாக்குறையல்ல; மாறாக, உணவுப் பொருட்களின் மீதான பல்தேசிய நிறுவனங்களின் இலாபவெறி ஆகும்.

உலகளாவிய உணவு முறையை கையாளுபவர்களாக, பல்தேசிய நிறுவனங்கள் மாறிவிட்டன. இவற்றின்மீது எதுவித கட்டுப்பாட்டையும் விதிக்க இயலாதவாறு, அரசுகள் செயலிழந்துள்ளன. இந்த இலாபவெறிக்கு, உக்ரேனில் இடம்பெறும் போர் நல்லதொரு சாட்டாகியுள்ளது.

உக்ரேன் போர் என்பது, ஒரு புவிசார் அரசியல், வர்த்தகம், சக்தி மூலங்களைக் கட்டுப்படுத்துவதற்கான மோதல். இது, ரஷ்யாவிலிருந்து ஐரோப்பாவை பிரிக்க முயலுவதன் மூலம், ரஷ்யாவுக்கும் ஐரோப்பாவுக்கும் எதிராக, அமெரிக்கா ஒரு மறைமுகப் போரில் ஈடுபடுவதைப் பற்றியது.

ஐரோப்பாவுக்கு தீங்கு விளைவிப்பதற்காக, ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதித்து, அதை மேலும் அமெரிக்காவைச் சார்ந்திருக்கச் செய்கிறது.

1980களில் இருந்து, புதிய தாராளமயக் கொள்கைகள், அமெரிக்கப் பொருளாதாரத்தை வெறுமையாக்கி உள்ளன. அதன் உற்பத்தித் தளம், கடுமையாகப் பலவீனமடைந்துள்ள நிலையில், சீனாவையும் ரஷ்யாவையும் குறைமதிப்புக்கு உட்படுத்துவதும், ஐரோப்பாவை பலவீனப்படுத்துவதும்தான் அமெரிக்காவின் மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கான ஒரே வழி. இதன் ஒருபகுதியே, எப்படியாவது ரஷ்யாவின் அனைத்து வர்த்தகத்தையும் குறிப்பாக இயற்கை எரிவாயு ஏற்றுமதியை தடுக்க முயல்வதாகும்.

ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகள் எப்படி இருக்கும் என்பது, அமெரிக்காவுக்கு முன்பே தெரியும். அவை, உலகை இரண்டு தொகுதிகளாகப் பிரித்து, ஒருபுறம் அமெரிக்காவும் ஐரோப்பாவும் மறுபுறம், சீனாவும் ரஷ்யாவும் என்பதாக, ஒரு புதிய கெடுபிடிப்போரைத் தூண்டிவிடவே அமெரிக்கா முயல்கிறது.

மின்சாரம், உணவு ஆகியவற்றின் அதிக விலை உயர்வுகளால், ஐரோப்பா பேரழிவுக்கு உள்ளாகும்; அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள், உணவு விலைகளின் அதிகரிப்பால் மிக மோசமாகப் பாதிக்கப்படும் என்று அமெரிக்க கொள்கை வகுப்பாளர்கள் அறிந்திருந்தனர்.

உலகளாவிய மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கு, அமெரிக்கா, ஒரு பெரிய நெருக்கடியை உருவாக்குவது இது முதல் முறையல்ல. உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பானது, நாடுகளை கடனில் திறம்பட சிக்க வைக்கிறது.

உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பின் ஊடு, மீண்டும் மனிதகுலத்தின் பரந்த பகுதிகள் மீது, அமெரிக்கா ஒரு போரை இன்று நடத்துகிறது. இது உருவாக்குகின்ற வறுமை, அமெரிக்காவை சார்ந்து நாடுகள் இருப்பதை உறுதி செய்கிறது. சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும், அமெரிக்கா சார்பாக நாடுகள் இருப்பதை உறுதிசெய்ய, அந்நாடுகளில் கடனை உருவாக்க பயன்படுத்தும் நிதி நிறுவனங்களாகும்.

தற்போதைய கொள்கைகள் குறிப்பாக, ஏழை நாடுகளுக்கு உணவு மற்றும் கடன் நெருக்கடியை உருவாக்க வடிவமைக்கப்பட்டுள்ளன. அமெரிக்கா, இந்தக் கடன் நெருக்கடியைப் பயன்படுத்தி, அதிக எண்ணெய், உணவு இறக்குமதிகளுக்கு கடன்களை செலுத்துவதற்காக நாடுகளை தனியார்மயமாக்குவதையும், அவர்களின் பொதுச் சொத்துகளை விற்கவும் கட்டாயப்படுத்துகிறது.

இந்த ஏகாதிபத்திய மூலோபாயம், இதேபோன்ற நோக்கத்தை நிறைவேற்றிய 'கொவிட் நிவாரணம்' கடன்களின் பின்னணியில் வருகிறது. 2021ஆம் ஆண்டில் மட்டும் கோவிட்-19 கடன்களின் ஊடாக, சர்வதேச நாணய நிதியம் 33 ஆபிரிக்க நாடுகளில், சிக்கனக் கொள்கைகளைத் தொடர ஊக்குவிக்கப்பட்டதை 'ஒக்ஸ்பாம்' மதிப்பாய்வு அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. இவ்வறிக்கையானது, 55 ஆபிரிக்க யூனியன் உறுப்பு நாடுகளில், 43 நாடுகள் அடுத்த ஐந்து ஆண்டுகளில், மொத்தம் 183 பில்லியன் டொலர் பொதுச் செலவுக் குறைப்புகளை எதிர்கொள்கின்றன என்று குறிப்பிடுகின்றது.

நீண்டகாலமாக விவசாயம், உணவு, விநியோகம் என்பவற்றை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம், மூன்றாமுலக நாடுகளில் பெரும்பகுதியை ஆதிக்கம் செலுத்த, அமெரிக்காவால் முடிந்தது.

உலக வங்கியின் புவிசார் அரசியல், கடன் மூலோபாயம் என்பன, நாடுகளை உணவுப் பற்றாக்குறைப் பகுதிகளாக மாற்றியமைத்தன. அதன் ஒரு வழிமுறையாக, மூன்றாமுலக நாடுகளில் பணப்பயிர்களின், பெருந்தோட்ட ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கக் கோரியதன் மூலம், அந்நாடுகள் தங்களுக்குத் தேவையான பயிர்களை பயிரிடாமல் செய்தது. இதன்மூலம் அந்நாடுகளை இறக்குமதியில் தங்கியிருப்பனவாக மாற்றியது.

உலகளாவிய வேளாண் வணிக நிறுவனங்களால் ஊக்குவிக்கப்பட்டு, உலக வங்கியால் ஆதரிக்கப்படும் 'உணவுப் பாதுகாப்பு' என்ற கருத்தாக்கமானது, மக்களின் உணவை வாங்கும் திறனை அடிப்படையாகக் கொண்டது. இது தன்னிறைவுப் பொருளாதாரத்தை நோக்கி, நாடுகளை நகர்த்துவதல்ல. இக்கருத்தாக்கம் உணவு தொடர்பிலான உலகளாவிய சந்தைகள் மற்றும் மாபெரும் விவசாய வணிக நிறுவனங்களால் கட்டுப்படுத்தப்படும் விநியோகச் சங்கிலிகள் ஆகியவற்றுடன் எந்த தொடர்பும் இல்லை போன்றதொரு தோற்றத்தை உருவாக்க முனைகின்றன.

உலகளாவிய விவசாயத்தின் கட்டுப்பாடு, பல தசாப்தங்களாக அமெரிக்க புவிசார் அரசியல் மூலோபாயத்தின் ஒரு முக்கிய அம்சமாக உள்ளது. பசுமைப் புரட்சியின் பெயரால் மூன்றாமுலக நாடுகளின் விவசாய முறைகள் மாற்றப்பட்டன. அவை இரசாயன உரம், கிருமிநாசினி சார்ந்த விவசாய மாதிரியை ஏற்றுக்கொண்டன. அவை தொடர்பான உள்ளீடுகள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு கடன்கள் தேவைப்பட்டன. அக்கடன்களை சர்வதேச நாணய நிதியம் வழங்கியது.

இது அந்நியச் செலாவணியைப் பெறுவதற்கு ஏற்றுமதிப் பொருட்களின் மோனோ-பயிர் முறையை நம்பியிருக்கும் உலகமயமாக்கப்பட்ட உணவு அமைப்பிற்குள் நாடுகளை சிக்க வைத்தது. உணவு தன்னிறைவு பெற்ற பல நாடுகள், உணவுப் பற்றாக்குறையுடைய நாடுகளாக மாறின.

உலக வர்த்தக அமைப்பின் வேளாண்மை ஒப்பந்தங்கள், 'உலகளாவிய உணவுப் பாதுகாப்பு' என்ற முகமூடித்தனமான கார்ப்பரேட் சார்புக்கு தேவையான வர்த்தக ஆட்சியை அமைக்கிறது. 'நவ்தன்யா இன்டர்நேஷனல்' ஜூலை 2022 இல் வெளியிட்ட 'பசியை விதைத்து இலாபத்தை அறுவடை செய்தல்: வடிவமைக்கப்பட்ட உணவு நெருக்கடி' என்று தலைப்பிட்ட அறிக்கையில், சர்வதேச வர்த்தகச் சட்டங்கள் மற்றும் வர்த்தக தாராளமயமாக்கல் பெரிய விவசாய வணிகத்துக்குப் பயனளித்து, நாடுகள் உணவுத் தன்னிறைவை எட்டுவதைத் எவ்வாறு தடுக்கிறது என்பதை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. உலகளாவிய சந்தை விலைகளின் ஏற்ற இறக்கங்களில் இருந்து விவசாயிகளின் பாதுகாப்பை புதிய வேளாண் ஒப்பந்தம் நீக்கியது. அதே நேரத்தில், அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் தங்கள் விவசாயத்திற்கு தொடர்ந்து மானியம் வழங்குவதற்கு விதிவிலக்குகள் செய்யப்பட்டன.

இது குறித்து விவரிக்கும் நவ்தானியாவின் அறிக்கை பின்வருமாறு சொல்கிறது: 'அரசு வரி பாதுகாப்பு மற்றும் மானியங்கள் நீக்கப்பட்டதால், சிறு விவசாயிகள் நிர்க்கதியாகினர். இதன் விளைவாக, விவசாயிகள் குறைவாக சம்பாதித்தும், நுகர்வோர் அதிக விலை செலுத்தியும் விவசாய வணிக இடைத்தரகர்கள் மிகப்பெரிய இலாபம் ஈட்டியும் வருகிறார்கள்.

'உணவுப் பாதுகாப்பு' என்பது, உலகச் சந்தையை ஒருங்கிணைக்கவும் கார்ப்பரேட்களின் கைகளில் அதை ஒப்படைப்பதற்காகவும் உணவு இறையாண்மை மற்றும் உணவு தன்னிறைவு ஆகியவற்றைத் தகர்க்க வழிவகுத்தது.

இதை செயலில் காண, நாம் இந்தியாவைத் தவிர வேறு எதையும் பார்க்க வேண்டியதில்லை. இந்தியாவில் இப்போது இரத்து செய்யப்பட்ட சமீபத்திய பண்ணை சட்டம் மற்ற நாடுகள் அனுபவித்த புதிய தாராளவாதத்தின் 'அதிர்ச்சி சிகிச்சை'யை இந்தியாவுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.

நுவ்தாகியா அறிக்கையானது, தற்போதைய உணவு நெருக்கடி எவ்வாறு ஊகங்களால் தூண்டப்படுகிறது என்பதை விளக்குகிறது. முதலீட்டு நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் விவசாயப் பொருட்களின் மீதான ஹெட்ஜ் நிதிகளின் ஊகங்கள், உணவுப் பொருட்களின் விலை உயர்வுக்கு எவ்வாறு லாபம் ஈட்டுகின்றன என்பதைக் காட்டுகின்றன.

பண்டங்களின் எதிர்கால விலைகள் சந்தையில் உண்மையான வழங்கல் மற்றும் தேவை ஆகியவற்றுடன் இணைக்கப்படாது, முற்றிலும் ஊகத்தின் அடிப்படையிலானவையாகவே உள்ளன.

தற்போதைய உணவு நெருக்கடிக்கு உலகளாவிய விவசாய வணிகத்தால் ஊக்குவிக்கப்படும் 'இழிந்த தீர்வு' என்பது விவசாயிகளை அதிக உற்பத்தி செய்ய தூண்டுவதும், குறைந்த உற்பத்தியின் நெருக்கடியைப் போல சிறந்த விளைச்சலைத் தேடுவதும் ஆகும். இது அதிக இரசாயன உள்ளீடுகள், அதிக மரபணு பொறியியல் நுட்பங்கள் போன்றவற்றைக் குறிக்கிறது. இது மேலும் விவசாயிகளை கடனில் சிக்க வைப்பதற்கு தொடர்ச்சியாக கார்ப்பரேட்டுகளின் தங்கியிருக்க வேண்டிய பொறியில் சிக்க வைக்கிறது.

உலகமானது தேவைப்படும் உணவுப்பொருட்களின் தயாரிப்புகள் இல்லாமல் பட்டினி கிடக்க நேரும் என்பது பழைய தொழில்துறை பொய். உண்மை என்னவென்றால், உலகமானது பெரிய விவசாய வணிகம் நிறுவிய முறையால் பட்டினி மற்றும் உணவு விலை உயர்வுகளை எதிர்கொள்கிறது.



## வாழ்வியல் தரிசனம்

மனிதர்களின் தேவைகள் நிறுத்தப்படுவதில்லை. எவ்வளவு பெரும் செல்வம், கல்வி, புகழ் என்பன சேர்ந்தாலும் எந்த ஒரு மனிதனும் முழுமையாகத் திருப்திப்பட மாட்டான். எங்கோ ஒரு குறையைச் சொல்லிவிடுகின்றார்கள்.

நாடுகளின் அரசுகள் கூட, ஆசை மிகுதியால் பக்கத்து நாடுகளுக்குள் நுழைந்து, அட்டகாசம் செய்து அந்த நாட்டைக் கைப்பற்றிவிடுவதுண்டு.

எளியவர்களை உதைப்பது, காலம் முழுக்க நடந்துகொண்டிருக்கின்றது. அரசியலில் இன்று நடப்பது என்ன? வலிமையற்ற அரசாங்கத்தை வைத்திருக்கும் அரசுகள், சிறுபான்மை மக்களுடன் அடிக்கடி மோதுகின்றன.


அவர்களை அடக்கி வைத்திருப்பதில் புலன்களைச் செலுத்தினால், மிஞ்சுவது மேலதிக ஆசைகளும் ஆணவமும் தான். உலக சரித்திரங்களை அறிந்தவர்கள் கூட, தங்களுக்கு அரசபதவி வந்தால், எவரை மதிக்கின்றார்?

ஓரிரு நல்லவர்கள் மாத்திரம், பதவியில் நீதியுடன் கருமமாற்றுகின்றார்கள். பிறரை வருத்தி, அவர்களின் முயற்சியால் வரும் முன்னேற்றம் ஈடேற்றம் தராது.

மாந்தர்கள், ஒருவரை நம்பி ஒருவர் இருக்க வேண்டும். அறத்தை அறியாதவர்கள், வெறுக்கும் காரியங்களைச் செய்வார்கள். அநேகர் அனுபவங்களை மறந்து போகின்றார்கள். இதனாலேதான் துன்பங்கள் வருகின்றன.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்



### தம்பிலுவிலில் கடலரிப்பு அதிதீவிரம்; பொதுமக்கள் அச்சம்

தம்பிலுவில் , திருக்கோவில் பிரதேசங்களில் அண்மைக்காலமாக பாரிய கடல் அரிப்பு இடம்பெற்று வருகிறது.

தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்துக்கு முன்னாலுள்ள கடல் பகுதி, திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி கோவிலுக்கு முன்னால் உள்ள கடல் பகுதி என்பன இந்தப் பாரிய கடலரிப்புக்கு இலக்காகி வருகின்றன.

கடந்த ஒரு வார காலமாக, உக்கிரமாக இடம்பெற்று வரும் இந்தக் கடல் அரிப்பில் நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் அடித்து செல்லப்பட்டு இருக்கின்றன. அது போல ஏனைய மரங்களையும் கடல் காவு கொண்டிருக்கிறது.

சுமார் 100 அடி பரப்பு கடலுக்குள் காவுகொள்ளப்பட்டு இருக்கின்றது. இதனால், மக்கள் அச்சத்தில் வாழ்ந்து வருகின்றார்கள். மீனவர்களும் கடலுக்குச் செல்லாமல் தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளார்கள். அவர்களது மீன்பிடி வள்ளங்களை கரையை விட்டு நகர்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, தம்பிலுவில், திருக்கோவில் பிரதேசங்களில் அண்மைக்காலமாக ஏற்பட்டிருக்கும் கடலரிப்பை தடுத்து நிறுத்த வேண்டும் என்று, பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

வி.ரி சகாதேவராஜா

உள்நாட்டு சிறிய, நடுத்தரளவு வியாபாரங்களுக்கு

# செலான் வங்கி தொடர்ச்சியாக வலுவூட்டல்



ஏற்றுமதித் துறையில் சிறிய, நடுத்தரளவு வியாபாரங்கள் கொண்டுள்ள பெருமளவான வாய்ப்புகளைக் கவனத்தில் கொண்டு, நாட்டின் பொருளாதாரத்தை வலிமைப்படுத்துவதற்காக, ‘அன்புடன் அரவணைக்கும் வங்கி’, செலான் வங்கி, ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிப் பட்டறையை முன்னெடுத்திருந்தது. சிறிய, நடுத்தரளவு வியாபாரங்களுக்கான இந்தப் பயிற்சிப் பட்டறையை இலங்கை வர்த்தக சம்மேளனத்துடன் இணைந்து முன்னெடுத்திருந்தது.

சிறிய, நடுத்தரளவு வியாபாரங்களின் மீது செலான் வங்கி பெருமளவில் கவனம் செலுத்துவதுடன், வழமையான கட்டுப்பாடுகளுக்கு அப்பால் சென்று, இந்தத் துறையின் ஏற்றுமதி சார் வாய்ப்புகளில் அதிகளவு கவனம் செலுத்த முன்வந்துள்ளது. சர்வதேச நிதிக்கூட்டுத்தாபனத்தின் பிரகாரம், ஒரு மில்லியனுக்கு அதிகமான சிறிய, நடுத்தரளவு வியாபாரங்களைக் கொண்ட இந்தத் துறை, அனைத்து வியாபாரங்களின் 75 சதவீதத்தைக் கொண்டுள்ளதுடன், இலங்கையின் பெருமளவான பொருளாதாரத்தின் பங்கையும் கொண்டுள்ளது.

மேலும், இலங்கையின் 45சதவீதமான தொழில் புரிவோர், இந்தச் சிறிய, நடுத்தரளவு வியாபாரங்களின் வினைத்திறனான செயற்பாடுகளில் தங்கியுள்ளனர். உற்பத்தித் துறையைச் சேர்ந்த பல சிறிய, நடுத்தரளவு வியாபாரங்களில், பெருமளவானவை மறைமுகமாக ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. இவை சர்வதேச சந்தைகளில் பிரவேசிப்பதில் ஆர்வத்தைக் கொண்டுள்ள போதிலும், ஏற்றுமதி சார் செயற்பாடுகள் மற்றும் நிதித் திட்டமிடல் தொடர்பில் போதியளவு அறிவு இன்மை போன்றன, அச்செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு தடையாக அமைந்துள்ளன.

துறைகள் தொடர்பான நிபுணத்துவ அறிவைக் கொண்டுள்ள செலான் வங்கி, ஏற்றுமதிச் சந்தையில் பிரவேசிக்க எதிர்பார்க்கும் இவ்வாறான சிறிய, நடுத்தரளவு வியாபாரங்களுக்கு வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்க தயாராகவுள்ளது. இந்த ஆதரவு மற்றும் ஊக்குவிப்பினூடாக, சிறிய, நடுத்தரளவு வியாபாரங்கள் மற்றும் ஏற்றுமதித்துறைக்கு ஊக்கமளிப்பதுடன், பல வழிகளில் அந்நியச் செலாவணியை ஈட்டி, தேசிய பொருளாதாரத்தையும் வலிமைப்படுத்துவதாக அமைந்திருக்கும்.


ஏற்றுமதி மீளாய்வு, சந்தை ஆய்வு மற்றும் சந்தை அணுகல் போன்ற முக்கியமான தலைப்புகள் பற்றி பயிற்சிப் பட்டறையில் கலந்தாலோசிக்கப்பட்டிருந்தது. சிறிய, நடுத்தரளவு வியாபாரங்களுக்கு ஏற்றுமதிப் பயணம் மற்றும் பரிபூரண ஏற்றுமதி தந்திரோபாயத்தை திட்டமிடவும், சர்வதேச சந்தையில் பிரவேசிப்பதற்கும் உதவியிருந்தது. மேலும், இந்தப் பயிற்சிப் பட்டறையின் போது, பங்குபற்றுநர்களுடன் கொடுப்பனவு முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தகத்தின் இடர்கள் பற்றி கலந்துரையாடப்பட்டதுடன், செலான் வங்கியில் காணப்படும் சம்பந்தப்பட்ட நிதிச் சேவைகளின் அறிமுகமும் வழங்கப்பட்டிருந்தது. இந்தப் பயிற்சிப்பட்டறையை VSSL Global Pvt. Ltd. பணிப்பாளரும், இணை ஸ்தாபகரும், சர்வதேச நிபுணர், கூட்டாண்மை பயிற்றுவிப்பாளர், C-நிலை நிறைவேற்று பயிற்றுவிப்பாளர் மற்றும் விரிவுரையாளருமான 20 வருடங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்ட உபுல் திஸாநாயக்க முன்னெடுத்திருந்ததுடன், செலான் வங்கியின் சிரேஷ்ட வங்கியியல் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

செலான் வங்கியின் கிளை கடன் பிரிவின் உதவி பொது முகாமையாளர் ரணில் திஸாநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், “எமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாக சிறிய, நடுத்தரளவு வியாபாரங்கள் அமைந்துள்ளன என்பதை செலான் வங்கி புரிந்து கொண்டுள்ளது. இந்தத் துறையை மேலும் கட்டியெழுப்புவதை நோக்கி செயலாற்றுவதுடன், ஏற்றுமதிக்கான வாய்ப்புகளையும் இனங்கண்டுள்ளோம். எமது சிறிய, நடுத்தரளவு வியாபார சந்தையால் விசேடமான தயாரிப்புகள் உற்பத்தி செய்யப்படுவதுடன், முறையாக வழிகாட்டப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டால், அடுத்த நிலைக்கு மேம்படுத்தக்கூடியதாக இருக்கும். எமது பயிற்சிப் பட்டறைகளினூடாக, அவர்களுக்கு வியாபாரங்களை மாற்றியமைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதுடன், உள்ளார்ந்த தகவல்கள், அறிவு மற்றும் முக்கியமாக நிதித் தீர்வுகளுடன் ஏற்றுமதிச் சந்தையை கையகப்படுத்தி தமது பயணத்தைத் தொடரக்கூடியதாக இருக்கும்” என்றார்.

யூனியன் அஷ்யூரன்ஸ் லைஃவ்ஸ்டைல் போனஸ்

# 2022 ஊடாக வாடிக்கையாளர்களுக்கு வெகுமதிகள்







யூனியன் அஷ்யூரன்ஸ், தொடர்ச்சியாக மூன்றாவது வருடமாகவும் லைஃவ்ஸ்டைல் போனஸ் 2022 திட்டத்தை முன்னெடுத்து, வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான அன்பளிப்புகளை வழங்கியிருந்தது.

2022 ஜனவரி முதலாம் திகதி முதல் மார்ச் 31ஆம் திகதிக்கு உட்பட்ட காலப்பகுதியில் ஆயுள் காப்புறுதியைக் கொள்வனவு செய்திருந்த தகைமை வாய்ந்த வாடிக்கையாளர்களிலிருந்து 2022 ஜுன் மாதம் இடம்பெற்ற அதிர்ஷ்டசாலி வெற்றியாளர் தெரிவினூடாக 50 வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். முதலாமிட வெற்றியாளராக, சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்த டபிள்யூ.ஐ.டி வாஸ் தெரிவு செய்யப்பட்டு, iPhone 13 Pro Max - 512GB ஐ பரிசாக பெற்றுக் கொண்டார். இரண்டாமிடத்தை, அவிசாவளையைச் சேர்ந்த எஸ்.பி வீரசிங்கவுக்கு, iPad Air 2021 - 64GB (cellular & wi-fi), an Apple Pencil 2nd Gen and a Magic Keyboard வழங்கப்பட்டன. மூன்றாமிடத்துக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பி.புஷ்பலதா தெரிவு செய்யப்பட்டு, 55அங்குல Samsung ஸ்மார்ட் தொலைக்காட்சியைப் பெற்றுக் கொண்டார்.

ஏனைய வெகுமதிகளில் மடிக்கணினிகள், சினமன் ஹோட்டலிலிருந்து வவுச்சர்கள், 43 அங்குல ஸ்மார்ட் தொலைக்காட்சிகள், Samsung A-series ஸ்மார்ட்ஃபோன்கள், வயர்லெஸ் சார்ஜிங் உடனான UV Sterilizers போன்றன அடங்கியிருந்தன. இவற்றை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில், வெற்றியீட்டியவர்களின் அருகாமையிலுள்ள யூனியன் அஷ்யூரன்ஸ் கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜூட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், “எமது வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியாக சிறந்த பெறுமதியை ஏற்படுத்திக் கொடுப்பது யூனியன் அஷ்யூரன்ஸைச் சேர்ந்த எமக்கு முன்னுரிமையானதாக அமைந்திருப்பதுடன், இந்த ஆண்டின் லைஃவ்ஸ்டைல் போனஸ் திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளதையிட்டு பெருமை கொள்கின்றோம். இந்தத் திட்டம் மூன்றாண்டு காலமாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றதுடன், வாடிக்கையாளர்களுக்கும், அவர்களின் குடும்பத்தாருக்கும் வாழ்க்கைமுறை வெகுமதிகளை வழங்குகின்றது. இலங்கையர்களுக்கு தமது கனவுகளை எய்துவதற்காக வலுவூட்டுவது எனும் எமது நோக்கத்துக்கமைய, லைஃவ்ஸ்டைல் போனஸ் ஊடாக, வாடிக்கையாளர்கள் நிதியளவில் பாதுகாக்கப்பட்டிருப்பதை ஊக்குவிப்பதற்கும், தமக்கு ஏற்ற வகையில் வாழ்க்கையை நிம்மதியாக அனுபவிப்பதற்கும் ஏதுவாக அமைந்துள்ளது” என்றார்.

பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி மஹேன் குணரட்ன தெரிவிக்கையில், “இந்தச் சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளர்களுக்கு லைஃவ்ஸ்டைல் போனஸ் உடன் வெகுமதிகளை வழங்க முடிந்துள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். எமது வாடிக்கையாளர்களுக்கு மிகச் சிறந்த அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு நிறுவனம் தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், இவற்றில் லைஃவ்ஸ்டைல் போனஸ் ஒரு அங்கமாக காணப்படுகின்றது. இந்த வெகுமதித் திட்டத்தைப் போன்று, நிறுவனத்துடன் வாடிக்கையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்திக் கொள்வதற்கான, உயர் தரம் வாய்ந்த புத்தாக்கமான அம்சங்களை தொடர்ந்தும் வழங்குவோம்” என்றார்.

வாடிக்கையாளர்களுக்கு லைஃவ்ஸ்டைல் போனஸ் ஊடாக, பெறுமதி வாய்ந்த வாழ்க்கைமுறை வெகுமதிகளை வழங்கி, அதனூடாக அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் வாழ்க்கையில் எதிர்பாராத அனர்த்தங்களிலிருந்து பாதுகாக்கும் வகையிலான நடவடிக்கைகளை யூனியன் அஷ்யூரன்ஸ் மேற்கொண்டுள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் WP/GT/5609 எனும் பதவிலக்கத்தின் கீழ் யூனியன் அஷ்யூரன்ஸ் தன்னைப் பதிவு செய்துள்ளதுடன், லைஃவ் ஸ்டைல் போனஸ் திட்டத்தை முன்னெடுப்பதற்காக அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட சகல தேவைப்பாடுகளையும் நிவர்த்தி செய்துள்ளது. அதன் பிரகாரம், அதிர்ஷ்டசாலி தெரிவை நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்களும், சுயாதீன வெளியக நபர்களும் முன்னெடுத்திருந்ததுடன், இந்தச் செயன்முறையின் முழுமையான வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்த்தித் தன்மை என்பன உறுதி செய்யப்பட்டிருந்தன.

பஞ்சாப்

# 9 மாதங்களில் 191 ட்ரோன்கள் ஊடுருவல்

பாகிஸ்தானில் இருந்து கடந்த 9 மாதங்களில் 191 ட்ரோன்கள் இந்தியாவுக்குள் ஊடுருவி உள்ளதாகவும், அதில் 7 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.



குறிப்பாக, பஞ்சாப்பில் உள்ள இந்தியா- பாகிஸ்தான் எல்லை வழியாக 171 ட்ரோன்களும், ஜம்மு செக்டார் வழியாக 20 ட்ரோன்களும் ஊடுருவியதாகவும், அதில் அமிர்தசரஸ், பெரோஸ்பூர், அபோகர் ஆகிய இடங்களில் 7 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளா



## யுவதி பலாத்காரம்; ஆறு பேர் கைது

வேலை வாங்கித் தருவதாகக் கூறி, யுவதியை நால்வர் பாலியல் பலாத்காரம் செய்த சம்பவம், கேரளாவில் இடம்பெற்றுள்ளது.

திருப்பூரை சேர்ந்த சரண்யா என்பவர், குறித்த யுவதியை வேலை வாங்கித்தருவதாகக்கூறி, வயநாடுக்கு அழைத்துச் சென்று, மஞ்சு என்பவரிடம் ஒப்படைத்துள்ள நிலையில், மஞ்சு என்பவர், யுவதியை சுற்றுலா விடுதிக்கு அழைத்துச் சென்று, அங்கிருந்த நால்வரிடம் ஒப்படைத்துள்ளார்.

குறித்த நால்வரும் அப்பெண்ணை பல்வேறு விடுதிக்கு அழைத்துச் சென்று பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர்.

இந்நிலையில், அவர்களிடமிருந்து தப்பியோடிய யுவதி, பொலிஸ் நிலையத்தில் இது குறித்து புகார் தெரிவித்த நிலையில், குறித்த ஆறு பேரையும் பொலிஸார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கர்நாடகா

## ஹிஜாப் வழக்கில் மாறுபட்ட தீர்ப்பு



கர்நாடக மாநிலம், உடுப்பி மாவட்டத்திலுள்ள கல்லூரியில், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மாணவிகள் ஹிஜாப் அணிந்து வரத் தடை விதிக்கப்பட்டது.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில், இதற்கு எதிராகக் குறித்த கல்லூரியைச் சேர்ந்த இஸ்லாமிய மாணவிகள் பலர், அம்மாநில உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

இம் மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம் , ‘ஹிஜாப் அணிவது இஸ்லாமியச் சட்டத்தில் அத்தியாவசியம் இல்லை. எனவே கல்வி நிலையங்களில் ஹிஜாப் அணிய விதிக்கப்பட்ட தடை செல்லும்’ என மார்ச் மாதம் 15ஆம் திகதி தீர்ப்பளித்திருந்தது.

இத்தீர்ப்பால் அதிருப்தி அடைந்த மாணவர்கள், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து, உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தனர். இம் மனு மீதான விசாரணை உச்சநீதிமன்றத்தில் செப்டெம்பர் மாதம் நடைபெற்றது.

இதன்போது கர்நாடக அரசு தரப்பிலும், இஸ்லாமிய மாணவிகள் தரப்பிலும் பரபரப்பான வாதங்கள் முன் வைக்கப்பட்டன. அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் வழக்கின் தீர்ப்பை நேற்றைய (13) தினம் ஒத்திவைத்தனர்.

அந்தவகையில் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில்,நேற்றைய தினம் நீதிபதிகள் ஹேமந்த் குப்தா, சுதான்சு துலியா ஆகியோர் அடங்கிய அமர்வு தீர்ப்பு அளித்துள்ளது.

அதன்படி, நீதிபதி ஹேமந்த் குப்தா, ஹிஜாப் வழக்கில் மேல்முறையீட்டு மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார். இதேபோன்று நீதிபதி சுதான்சு துலியா, ஹிஜாப் அணிய தடைவிதித்த கர்நாடக அரசின் அரசாணையை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளார்.

மேலும், இந்த வழக்கின் உரிய நடவடிக்கைக்காக தலைமை நீதிபதிக்கு பரிந்துரைக்கிறோம் என்றும் தெரிவித்துள்ளார். இந்த மாறுபட்ட தீர்ப்பின் காரணமாக, இந்த விவகாரம் அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றப்பட வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

புதுடெல்லி

## ரயில்வே ஊழியர்களுக்கு நற்செய்தி




ரயில்வே ஊழியர்களுக்கு தீபாவளி போனசாக 78 நாள் ஊதியத்தை வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

புதுடெல்லியில் நேற்று (13) பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பேசிய மத்திய அமைச்சர் அனுராக் தாக்கூர், “11.27 இலட்சம் ரயில்வே ஊழியர்களுக்கு போனஸ் வழங்கப்படவுள்ளது. அதிகபட்சமாக 17,951 ரூபாய் வரை போனசாக வழங்கப்படும். சர்வதேச அளவில் LPG யின் விலை உயர்ந்திருப்பதைக் கவனத்தில் கொண்டு, எண்ணெய் நிறுவனங்களுக்கு ஒரு முறை மானியமாக 22,000 கோடி வழங்கப்படவுள்ளது. இதன்மூலம் விலை அதிகரிப்பு சுமை மக்கள் மீது சுமத்தப்படாது” எனவும் தெரிவித்துள்ளார்.

கேரளா

## கேரளாவை உலுக்கிய நரபலி



கேரளாவில் வீட்டில் செல்வம் பெருக வேண்டும் என்பதற்காக, 2 பெண்கள் கொடூரமான முறையில் நரபலி கொடுக்கப்பட்ட சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

எர்ணாக் குளத்தைச் சேர்ந்த 50 வயதான, அதிர்ஷ்ட இலாபச் சீட்டு விற்பனை செய்யும் பெண்ணொருவர் செப்டம்பர் மாதம் மாயமானார். இது குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்த நிலையில் அப்பகுதியைச் சேர்ந்த பக்வந்த் சிங், அவரது மனைவி லைலா மற்றும் முகமது ஷபி ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

மூவரிடமும் நடத்தப்பட்ட விசாரணையில், பக்வந்த் சிங்கும் லைலாவும் செல்வந்தர்களாக வேண்டும் என்பதற்காக, அவர்களது நண்பர் முஹமது ஷபி என்பவருடன் சேர்ந்து, ஜூலை மற்றும் செப்டெம்பர் மாதங்களில் இரு பெண்களை ஏமாற்றி வீட்டிற்கு அழைத்துவந்து நரபலி கொடுத்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதைக்கேட்டு அதிர்ச்சி அடைந்த பொலிஸார் குறித்த மூவரையும் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

## இந்திய இருமல் மருந்துக்குச் சிக்கல்



மேற்கு ஆபிரிக்க நாடான காம்பியாவில் அண்மையில் 66 குழந்தைகள் சிறுநீரகச் செயலிழப்புக் காரணமாக உயிரிழந்தனர்.

இதையடுத்து இந்த உயிரிழப்புகளுக்கும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தரமற்ற நான்கு இருமல் மருந்துகளுக்கும் இடையில் தொடர்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், இப்புகாரை ஆராய மத்திய அரசு நான்கு பேர் கொண்ட நிபுணர் குழுவை நியமனம் செய்துள்ளது. அதேசமயம் அந்நிறுவனங்களின் இருமல் மருந்துகளுக்கும் தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கர்நாடகா



## கைகளால் வடை சுட்ட பக்தர்கள்

கர்நாடகா மாநிலம், குமுதாவில் உள்ள ராஜேஸ்வரி தேவி கோவிலில், அண்மையில் நடைபெற்ற சிறப்பு பூஜையில், ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு கொதிக்கும் எண்ணெய்க்குள் கைகளை விட்டு, வடை சுட்டு, தங்கள் நேர்த்திக் கடனை நிறைவேற்றியுள்ளனர்.

கொதிக்கும் எண்ணெய்க்குள் கைகளை விட்டும் யாருக்கும் தீக்காயம் ஏற்படவில்லை. இது அம்மனின் அருளால் நடந்த அதிசயம் என ராஜேஸ்வரி தேவி கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.


பிரித்தானியா

# 1 இலட்சம் அரச ஊழியர்கள் பணி நீக்கம்

பிரித்தானியாவின் புதிய பிரதமரான லிஸ் ட்ரஸ் நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியை எதிர்கொள்ள பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில் இன்ஸ்டிடியூட் பார் பிஸ்கல் ஸ்டடீஸ் (Institute for Fiscal Studies) என்ற பிரித்தானியாவின் பொருளாதார ஆராய்ச்சி நிறுவனம்,பிரித்தானியா கடனிலிருந்து மீள்வதற்கு அரச ஊழியர்களைப் பணி நீக்கம் செய்யுமாறு ஆலோசனை கூறியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த வருடத்தில் மாத்திரம் ஒரு இலட்சம் ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட வாய்ப்பிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அத்துடன் பிற பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படாது எனவும் அடுத்த வருடத்திலும் பணவீக்கம் அதிகரிக்கும் பட்சத்தில் மேலும் பணியாளர்கள் ஒரு இலட்சம் பேரை பணிநீக்கம் செய்ய தீர்மானிக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

## ஒரே நாளில் 118 மில்லியன் பேரை இழந்த மார்க் ஸக்கர்பெர்க்

உலக அளவில் அதிகளவான மக்கள் பயன்படுத்தும் சமூக வலைத்தளங்களில் ஒன்றாக பேஸ்புக் காணப்படுகின்றது.

பேஸ்புக்கில் தனிநபர் தன்னுடைய கணக்கிலிருந்து அதிகபட்சமாக 5,000 நபர்களோடு மாத்திரமே நட்பில் இருக்க முடியும். எனினும் அந்த வரையறை முடிந்துவிட்டாலும் அவருடன் தொடர்பில் இருக்க விரும்புவர்களுக்காக 'ஃப்லோ' என்ற அம்சத்தை பேஸ்புக் வழங்கியுள்ளது.

இந்நிலையில் அண்மையில் ஃபேஸ்புக் தளத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக, 118 மில்லியன் பின்தொடர்பவர்களை இழந்துள்ளதாக மெட்டா நிறுவனத்தின் நிறுவனரும், தலைமை செயற்பாட்டு அதிகாரியுமான மார்க் ஸக்கர்பெர்க் கவலை தெரிவித்துள்ளார்.

அத்துடன் பேஸ்புக்கை மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டு வரும் பணியை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேபாளம்

## நிலச்சரிவில் சிக்கி 35 பேர் உயிரிழப்பு



நேபாளத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவில் சிக்கி 35 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறிப்பாக இக்கனமழை காரணமாக கர்னாலி மாகாணத்தின் பல்வேறு நகரங்கள் வெள்ளக்காடாகி உள்ளன எனவும், நூற்றுக்கணக்கான வீடுகள் மற்றும் வாகனங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன எனவும், இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிப்படைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பலர் காணாமற்போயுள்ளனர் எனவும் அவர்களைத் தேடும் பணியில் மீட்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போலாந்து

## போலாந்தில் உச்சத்தைத் தொட்ட மின்சாரக் கட்டணம்

உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி உக்ரேன் மீது ரஷ்யா கடந்த 8 மாதங்களுக்கு மேலாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இதன்காரணமாக ரஷ்யா மீது அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் பொருளாதாரத்தடைகளை விதித்து வருகின்றன. இதனால் ரஷ்யாவும் ஐரோப்பிய நாடுகளுக்கான கச்சா எண்ணெய், எரிவாயு, உரம், தானியங்களின் விநியோகத்தை முழுமையாக நிறுத்தியுள்ளது.

இந்நிலையில் எரிவாயு நெருக்கடியால் போலாந்தில் மின்சாரக் கட்டணம் சடுதியாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக டிசெம்பர் மாதம் முதல் அந்நாட்டின் மின்சாரக் கட்டணம் 90% ஆக அதிகரிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கராச்சி

## பஸ் தீப்பிடித்து எரிந்ததில் 21 பேர் உயிரிழப்பு



பாகிஸ்தானின் கராச்சி அருகே பஸ்ஸொன்று திடீரெனத் தீப்பிடித்து எரிந்ததில் அதில் பயணித்த 21 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ள சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கராச்சியிலிருந்து ஹைதராபாத் நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பஸ்ஸே நூரியாபாத் அருகே திடீரென தீப்பிடித்து விபத்துக்குள்ளாகியுள்ளது.


இச்சம்பவத்தின் போது பயணிகள் சிலர் பஸ்ஸில் இருந்து கண்ணாடிகளை உடைத்துக் கொண்டு கீழே குதித்துத் உயிர் தப்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், பஸ்ஸில் தீ மிக விரைவாகப் பரவியதால், அதில் சிக்கிக் கொண்ட 21 பேர் உடல்கருகி உயிரிழந்துள்ளனர்.

மேலும், பலர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அமெரிக்கா

## விமான நிலைய இணையதளங்களில் சைபர் தாக்குதல்



சிகாகோ, லாஸ் ஏஞ்சல்ஸ், பினீக்ஸ், செயின்ட் லூயிஸ் விமான நிலையங்களின் இணையங்கள் ஹேக் செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.


இந்நிலையில் கில் நெட் எனப்படும் ரஷ்ய சார்பு ஹேக்கிய குழு, அமெரிக்க விமான நிலைய இணைய தளங்களில் ஊடுருவியுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் இச் சைபர் தாக்குதல்களால் விமான சேவையின் தகவல் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து விமான நிலைய இணைய தளங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு பின்னர் உடனே செயற்பாட்டுக்கு வந்துள்ளன.

ரஷ்யா

## ரஷ்யாவுக்கு எதிராக திரும்பிய உலக நாடுகள்



நேட்டோ படையுடன் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, உக்ரேன் மீது ரஷ்யா கடந்த 8 மாதங்களுக்கு மேலாகப் போர் தொடுத்து வருகின்றது.

அதே சமயம் உக்ரேனும் ரஷ்யா மீது பதில் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இப்போரில் உக்ரேனின் பெரும்பாலான பகுதிகளை ரஷ்யப் படைகள் கைப்பற்றியுள்ள நிலையில், அண்மைக்காலமாகக் கைப்பற்றிய பகுதிகளை ரஷ்ய அரசு தம்முடன் இணைத்து வருகின்றது.

ரஷ்யாவின் இச்செயல் சர்வதேச சட்டத்தை மீறும் செயலாக உள்ளது என உலக நாடுகள் கண்டித்து வருகின்றன.

இந்நிலையில் உக்ரேனின் பிராந்தியங்களை ரஷ்யா இணைத்ததை கண்டித்து ஐ.நா சபையில் தீர்மானமொன்று கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளதோடு இத் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதனையத்து தீர்மானத்தின் மீது இரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என ரஷ்யா, கோரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில் ரஷ்யாவின் இக் கோரிக்கையை ஏற்பதா? வேண்டாமா என ஐ.நா சபையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் இந்தியா உள்ளிட்ட 107 நாடுகள் ஐ.நா உறுப்பினர்கள் ரஷ்யாவிற்கு எதிராக வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சம்பியன்ஸ் லீக்:

# சமநிலையில் பார்சிலோனா - இன்டர் மிலன் போட்டி

ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலனுடனான போட்டியை 3-3 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா சமப்படுத்தியிருந்தது.

பார்சிலோனா சார்பாக, றொபேர்ட் லெவன்டோஸ்கி இரண்டு கோல்களையும், உஸ்மான் டெம்பிலி ஒரு கோலையும் பெற்றனர். இன்டர் மிலன் சார்பாக, நிக்கொலோ பரெல்லா, லொட்டரோ மார்ட்டினஸ், றொபின் கொஸென்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட்டின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணிக்கும், பெல்ஜியக் கழகமான கிளப் ப்ரூகேயுக்குமிடையிலான போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.






அவுஸ்திரேலியாவுக்கெதிரான

## தொடரைக் கைப்பற்றியது இங்கிலாந்து

அவுஸ்திரேலியாவுக்கெதிரான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரை இங்கிலாந்து கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், முதலாவது போட்டியில் ஏற்கெனவே வென்றிருந்த இங்கிலாந்து, கன்பெராவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்தே, இன்னும் ஒரு போட்டி இருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றுவதை உறுதிப்படுத்திக் கொண்டது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

இங்கிலாந்து: 178/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: டேவிட் மலான் 82 (49), மொயின் அலி 44 (27) ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 3/34 [4], அடம் ஸாம்பா 2/26 [3], பற் கமின்ஸ் 1/29 [4], கிளென் மக்ஸ்வெல் 0/6 [1])

அவுஸ்திரேலியா: 170/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மிற்செல் மார்ஷ் 45 (29), டிம் டேவிட் 40 (23), மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 22 (13), பற் கமின்ஸ் ஆ.இ 18 (11) ஓட்டங்கள். பந்துவீச்சு: சாம் கர்ரன் 3/25 [4], பென் ஸ்டோக்ஸ் 1/10 [2], டேவிட் வில்லி 1/21 [3], றீஸ் டொப்லி 1/35 [4])

போட்டியின் நாயகன்: டேவிட் மலான்

இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டியானது, இன்று பிற்பகல் 1.40 மணிக்கு நடைபெறவுள்ளது.

முத்தரப்புத் தொடர்:

## பங்களாதேஷை வென்ற பாகிஸ்தான்



நியூசிலாந்து, பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முத்தரப்பு இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரில், கிறைஸ்ட்சேர்ச்சில் நேற்று நடைபெற்ற பங்களாதேஷுடனான போட்டியில் பாகிஸ்தான் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷின் அணித்தலைவர் ஷகிப் அல் ஹஸன், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், ஆரம்பத்திலேயே சௌமியா சர்க்காரையும், நஜ்முல் ஹொஸைன் ஷன்டோவையும் நசீம் ஷா, மொஹமட் வஸிமிடம் இழந்தது. அடுத்து வந்த லிட்டன் தாஸின் 69 (42), ஷகிப்பின் 68 (42) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 173 ஓட்டங்களை பங்களாதேஷ் பெற்றது. பந்துவீச்சில், ஷா 4-0-27-2, வஸிம் 4-0-33-2, ஷடாப் கான் 4-0-31-0, இஃப்திஹார் அஹ்மட் 1-0-7-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 174 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், மொஹமட் றிஸ்வானின் 69 (56), அணித்தலைவர் பாபர் அஸாமின் 55 (40), மொஹமட் நவாஸின் ஆட்டமிழக்காத 45 (20) ஓட்டங்களோடு 19.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், ஹஸன் மஹ்மூட் 4-0-27-2, சௌமியார் சர்க்கார் 1-0-6-1, ஷொரிஃபுல் இஸ்லாம் 4-0-30-0, தஸ்கின் அஹ்மட் 4-0-32-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக றிஸ்வான் தெரிவானார்.

இத்தொடரின் இறுதிப் போட்டியில் நியூசிலாந்தை இன்று காலை 7.30 மணிக்கு பாகிஸ்தான் எதிர்கொள்ளவுள்ளது.

## கரப்பந்தாட்டப் போட்டியும், கௌரவிப்பு நிகழ்வும்

ஆ. ரமேஸ்

சர்வதேச விளையாட்டு வீரர்கள், சமூக சேவையாளர்கள் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்டோரை கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று, உடப்புஸ்லாவை எமஸ்ட் ஜெட்லைன் விளையாட்டு மைதானத்தில் நாளை மறுதினம் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வையொட்டி இன்று, நாளை, நாளை மறுதினத்தில் கரப்பந்தாட்டத் தொடரொன்று ஜெட்லைன் இளைஞர் கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை தேசிய, சர்வதேச மெய்வல்லுநர் போட்டிகளில் இலங்கைக்கு பதக்கங்களை வென்று கொடுத்த மணிவேல் சத்தியசீலன் ஒழுங்கு செய்துள்ளார். அத்துடன் அன்றைய தினம் பிரசித்தி பெற்ற தேசிய, சர்வதேச விளையாட்டு வீரர்கள் உட்பட சமூக சேவையாளர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலர் உடப்புஸ்ஸலாவை நகரில் இருந்து வாகன பேரணியில் ஊர்வலமாக அழைத்து செல்லப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு மாகாணத்தில் பட்டிருப்பு வலயம் முதலிடம்

சகா




கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் நடாத்திய மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் கிழக்கில் உள்ள 17 கல்வி வலயங்களில் பட்டிருப்பு கல்வி வலயம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இவ்விளையாட்டு விழாவில் கீழ்க் கண்டவாறு வலய, பாடசாலை நிலைகள் காணப்பட்டிருந்தன.

பட்டிருப்பு கல்வி வலயம் - 194 புள்ளிகள்.

கந்தளாய் கல்வி வலயம் - 94 புள்ளிகள்.

கல்முனை கல்வி வலயம் - 88 புள்ளிகள்.

பாடசாலை ரீதியில் களுதாவளை ம.வி. தே.பா- 123 புள்ளிகள்.

கந்தளாய் அக்ரபோதி ம.வி - 46 புள்ளிகள்.

செட்டிபாளையம் ம.வி - 42 புள்ளிகள்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 14 ஒக்டோபர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.